Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 349 | திங்கட்கிழமை | ஐப்பசி 29 ஆம் நாள் 15 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# அரசுக்கு 'செக்'!

## பட்ஜெட்டில் அதிர்ச்சி கொடுக்க பங்காளிக் கட்சிகள் திட்டம்!

கொழும்பு, நவம்பர் 15

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரசில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளன என்றும்– இந்தச் சந்திப்பு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்றும் அறிய முடிகின்றது. 15 ▶

## கொரோனா காவு 23

கொழும்பு, நவ.15

நாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 23 கொரோனா உயிரிழப்புக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று அறிவித்தார். உயிரிழந்தவர்களில் 10 பேர் ஆண்கள் என்றும், 13 பேர் பெண்கள் என்றும் அறி 15 ▶

## ஆசிரியர்கள் – அதிபர்கள் போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ.15

ஆசிரியர்கள் - அதிபர்கள் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி, ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதிவரை இடைநிறுத்தப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆசிரியர் சங்கங்களின் 15 ▶



## சவேந்திர சில்வாவுக்கு தடை வலியுறுத்துகின்றார் சாரா!

கொழும்பு, நவ.15

இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக தடை விதிப்பதற்கு ஆதரவு தர வேண்டும் என்று பிரிட்டன் 15 ▶

## கொரோனா: வவுனியாவில் மூதாட்டி சாவு!

வவுனியா, நவ.15

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா, கோவில்புதுக்குளத்தைச் சேர்ந்த 94 வயது மூதாட்டி ஒருவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

உயிரிந்தவரின் சடலம் 15 ▶

## யாழ்ப்பாணத்து யுவதியே மன்னாரில் சடலமாக மீட்பு!

### பொலிஸ் விசாரணை தீவிரம்

மன்னார், நவ.15

மன்னார், கோந்தைப்பிட்டி கடற்கரையில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட பெண், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். மன்னார், மூன்றாம்பிட்டியில் தனது சகோதரனுடன் தங்கியிருந்த கீர்த்தனா (வயது-22) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15 ▶

## கொரோனா பற்றிய அலட்சியம் இருண்ட யுகத்துக்கே தள்ளும்

### சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை

கொழும்பு, நவ.15

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சிறிய அளவிலான தொற்றாளர் எண்ணிக்கையைஅலட்சியப்படுத்தக்கூடாது. அபாயத்தை உணர்ந்து, அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றினாலே புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் அன்றாட வாழ்வை முன்னெடுக்க முடியும்- இவ்வாறு மருத்துவ தொழில்நுட்ப சேவையின் பணிப் 15 ▶

### முச்சந்தி முரளி



"கச்சா எண்ணெய்யும் போச்சா...? அப்ப இனி பெற்றோலுக்கும் கியூவிலதான் நிக்கோணும் போல..."

## ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் இலங்கைக்குத் திடீர் வருகை!

கொழும்பு, நவ.15

அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு, எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இலங்கையில் சில தினங்கள் தங்கியிருந்து அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பில் ஆராய்ந்து ஐ.நாவுக்கு 19 ▶

## முடிந்தது கச்சா எண்ணெய் சபுகஸ்கந்த நிலையம் பூட்டு

### 51 ஆண்டுகளின் பின்னர் முதன்முறையாகச் சம்பவம்

கொழும்பு, நவ.15

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் 51 ஆண்டுகளின் பின்னர் முதன் முறையாக இடைநிறுத்தப்படவுள்ளன.

சுத்திகரிப்பு நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கச்சா எண்ணெய் நேற்றுடன் தீர்ந்துள்ளதை அடுத்தே, இன்றுடன் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படவுள்ளன.

அதேவேளை, இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ், 15 ▶

## தமிழரின் திருநாளை மாற்ற எவருக்கும் உரிமையில்லை!

யாழ்ப்பாணம், நவ.15

தமிழர்களின் திருநாளை, ஒரு மதத்தினர் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன். (விரிவு 02ஆம் பக்கம்)

வரவு - செலவுத் திட்டத்தில் புறக்கணிப்பு

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட அரச உத்தியோகத்தர்கள் பரிசீலனை

**கொழும்பு, நவ. 15**

**2022 வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் அவதானம் செலுத்தாவிடின், எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக குறித்த சம்மேளனம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.
கடந்த 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளில் இலங்கையில் உள்ள அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பாக திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. இதனால் 1.5 மில்லியன் அரச உத்தியோகத்தர்களும் அவர்களை நம்பி வாழும் ஏறக்குறைய 6 மில்லியன் மக்களும் வாழ்க்கையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த நிலைமை தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் அவதானம் செலுத்தாவிடின், எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட போவதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## ஊடகப் பணியாளரை விசாரித்த ரி.ஐ.டியினர்

யாழ்ப்பாணம், நவ. 15
ஆவரங்காலைச் சேர்ந்த ஊடகப்பணியாளர் சி.ஜெயானந்தன் என்பவர் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.
சில மாதங்களுக்கு முன்னர் இவர் குறித்து, கம்பஹா, சீதுவவில் வசிக்கும் அவரது உறவினர்களிடம் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் விசாரித்துச் சென்றநிலையில், கடந்த வெள்ளிக்கிழமை கிருலப்பனை வீதி, கெப்பிட்டல் கட்ட 3ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு சுமார் மூன்று மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
சமூக ஊடகமான வட்ஸ் அப் குழுவில், முள்ளிவாய்க்கால் நிகழ்வு சம்பந்தமான இணையதளச் செய்தியை பகிர்ந்தமை மற்றும் குறித்த வட்ஸ் அப் குழு சம்பந்தமாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, கைத்தொலைபேசியும் பரிசோதிக்கப்பட்டது.
அதேவேளை, விடுதலைப்புலிகள் தொடர்பானவர்களுடன் தொடர்பைப்பேணல், அவர்கள் தொடர்பான அடையாளங்களை வைத்திருத்தல் என்பவற்றுக்கு வழங்கப்படும் தண்டனைகள் குறித்தும் அவருக்கு அறிவுறுத்தப்பட்ட பின்னரே விடுக்கப்பட்டார். (த)

## தென்னிலங்கையருக்கு அனுமதி வழங்கவில்லை

*கிராமிய கடற்றொழில் அமைப்பு மறுப்பு*

யாழ்ப்பாணம்,நவ.15
புங்குடுதீவில் அட்டைப்பண்ணை மற்றும் இறால் பண்ணை அமைப்பதற்குத் தென்னிலங்கையைச் சேர்ந்த எவருக்கும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று ஸ்ரீ முருகன் கிராமிய கடற்றொழில் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
எமது கடற்பகுதியில் எமது சங்க அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு அமைவாக வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கடற்றொழில் நீரியல் மூலகங்கள் வளத்துறை அமைச்சர், எமது அங்கத்தவர்கள் 54 பேருக்குக் கடற்பாசி மற்றும் கடலட்டை வளர்க்க மானிய அடிப்படையில் உதவிகளை வழங்கியுள்ளனர்.
இதனை சிலர் அரசியல் உள்நோக்கங்களுடன் நிறுத்துவதற்காக தவறான தகவல்களை வெளியிட்டுள்ளனர். - என்றுள்ளது. (ஓ-4)

## மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரசாயன உரங்கள் வழங்கத் திட்டம்

கொழும்பு, நவ. 15
சில மாவட்டங்களில் பெய்த மழையால் விவசாயிகள் முன்பு பயன்படுத்திய உரங்கள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இருப்பில் உள்ள இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.
அண்மைய நாள்களில் பெய்த மழையால் நுவரெலியா, பதுளை மற்றும் பண்டாரவளை மாவட்டங்களில் மரக்கறி மற்றும் பழ உற்பத்தியாளர்கள் பயன்படுத்திய கரிம உரங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. நெல் விதைப்பில் ஈடுபட்டவர்களும் பெருமளவு பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.
இந்த நிலையிலேயே மேற்படி பகுதிகளுக்கு இரசாயன உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## அதிக வட்டிக்கு பணம்பெற்றமையே டொலர் பிரச்சினைக்கு காரணம்

கொழும்பு, நவ. 15
2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதிக வட்டிக்குக் கடனை பெற்று, அதனை எந்தவித வருமானமும் கிடைக்காத இடங்களில் அபிவிருத்திப் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டமையே, இன்றைய டொலர் பிரச்சினைக்கான காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிக்கின்றார். தற்போதுள்ள டொலர் பிரச்சினைக்கு, 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் எந்தவித தீர்வும் முன்வைக்கப்படவில்லை. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குக்கூட முடியாத அளவுக்கு டொலர் பிரச்சினை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.
விவசாயிகள் கொள்ளையடிக்கும் நிலைக்கும், தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். - என்றார். (த-இ)

தமிழர்களின்

## திருநாளை ஒரு மதத்தவர்கள் எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

ஆறு.திருமுருகன் கேள்வி



யாழ்ப்பாணம், நவ. 15
தமிழர்களின் திருநாளை ஒரு மதத்தவர்கள் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி, செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.
ஓய்வுநிலை மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகனின் சேவை நயப்பு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் நேற்றுமுன்தினம் முற்பகல் இந்த விழா இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் மேலும் தெரிவித்ததாவது;
இந்து மக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டவர்கள். நாங்கள் படிக்கின்ற காலத்திலிருந்து கிறிஸ்தவ நண்பர்களோடு சேர்ந்து பழகி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். நான் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது என்னை முதன்முதலில் நேரடியாக வந்து வாழ்த்தியவர், தற்போது யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயராக உள்ள ஜஸ்டின் ஞானப் பிரகாசம் ஆண்டகையே. அவ்வாறு இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம்.

**பணம் கொடுத்து மதம் மாற்றுவது நல்லதல்ல**

தற்போது ஒரு பிரச்சினை காணப்படுகின்றது. கிறிஸ்தவ மதத்தில் பல சபைகளை உருவாக்கி தமது மதத்துக்கு மதம் மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பணத்தைக் கொடுத்து மதமாற்றம் செய்வதை முன்னெடுக்கிறார்கள். அது ஏற்கக்கூடிய ஒரு விடயமல்ல. நாங்கள் இந்துக்கள் எப்போதாவது எமது மதத்துக்கு மாற வேண்டும் என்று எங்காவது கேட்டிருக்கின்றோமா? நாங்கள் கேட்கமாட்டோம்.
அதேபோலவே ஒட்டுமொத்த தமிழர்களின் திருநாளை ஏனைய மதத்தவர்களை புறந்தள்ளி விட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எவ்வாறு தீர்மானிக்க முடியும்? ஏனைய மதத்தவர்களோடு கலந்துரையாடாது ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எடுத்த முடிவை ஏனையவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? 80வீதமாக உள்ள ஏனைய மதத்தவர்களை புறந்தள்ளி விட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம் தமிழர்களின் திருநாளை தீர்மானிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம். இந்துக்கள் கிறிஸ்தவ மக்களுக்கோ, கிறிஸ்தவ துறவி களுக்கோ எதிரானவர்கள்ல்லர். நாங்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றோம். இந்துக்களாகிய நாம் எந்த மதத்தவர்களோடும் சண்டை பிடிக்கப்போவதில்லை. ஆனால் எமக்கு ஒரு தாக்கம் ஏற்படும்போது அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதானே! - என்றார். (த)

## யஸ்மின் சூகா உள்ளிட்ட பிரதிவாதிகளை முன்னிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, நவ. 15
அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே தாக்கல் செய்த சிவில் அவதூறு வழக்கில், அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, யஸ்மின் சூகா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த மற்றைய இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை அனுப்பியுள்ளது.
பிரதிவாதிகள் நீதிமன்றில் ஆஜராக வில்லை என மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.டி.சத்துரிக்கா டி சில்வாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது அவர் மீண்டும் அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞரும் ஆர்வலருமான யஸ்மின் சூகா மற்றும் இணையத்தள நிர்வாகி களுக்கு எதிராக, அரச புலனாய்வுப் பிரிவின் பிரதான மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, ஒரு பில்லியன் ரூபா இழப்பீட்டைகோரி வழக்குத் தொடர்ந்திருந்தார்.
பிரதிவாதிகளால் தீங்கிழைக்கும், அவதூறான அறிக்கைகள் வெளியிடப்பட்டன என்று தன் மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)




### பொது இடங்களுக்கு

# 2 டோஸும் ஏற்றியோருக்கே மன்னாரில் இனி அனுமதி

மன்னார், நவ 15

**மன்னார் மாவட்டத்தில் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றியவர்கள் மாத்திரமே, இன்று திங்கட்கிழமை தொடக்கம் வியாபார நிலையங்கள், சந்தைகள், பொதுப்போக்குவரத்து வாகன சேவைகள் ஆகியவற்றை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.**



இவ்வாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னாரில் தற்போது வைரஸ் பரவுவதற்கு ஏற்ற காலநிலை காணப்படுகின்றது. மக்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கொரோனாத்தொற்று அதிகரிப்புக்கு பிரதான காரணமாக மக்கள் அதிகமாக வெளியில் நடமாடுவது, சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது செயற்படுவது மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கைக்குமேல் பங்குகொள்வது ஆகியனவும் காரணங்களாக அமைகின்றன என்று தெரிவித்தார். மாவட்டத்தில் கடந்த 13 நாள்களில் 292 தொற்றாளர்களும் இதுவரையான காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 2ஆயிரத்து 685 கொரோனாத்தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (து-56)

### போர்க்காலத்தில் புதைக்கப்பட்ட

# தங்கத்தைதேடிய குழுவினர் உபகரணங்களுடன் கைது

மன்னார், நவ. 15

மன்னாரில், போர்க்காலத்தில் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தங்கம் உள்ளிட்ட பொருள்களை எடுப்பதற்காக அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் 6 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இரகசியத் தகவலின் பேரில் மன்னார் பொலிஸார் மன்னார் இராணுவ முகாம் அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் பயணித்த வாகனமும், அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 60 வயதுடைய ஹெட்டிமுல்ல, கொடியாக்கும்பு, பாணந்துறை, பொரலந்த மற்றும் ஹல்பே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அவர்கள் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-இ)

### நெடுங்கேணியில் அரசுக்கு எதிராக

# இன்று கவனவீர்ப்பு

வவுனியா, நவ. 15

திட்டமிட்ட இன விகிதாசாரத்தை குலைக்கும் நடவடிக்கைகளை கண்டிப்பதுடன், அவற்றுக்கு எதிராக நெடுங்கேணி நகரில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில், கட்சியின் வன்னிமாவட்ட செயலாளர் என்.பிரதீபன் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில்,

வடக்கு- கிழக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் இன விகிதாசாரத்தை குழப்பும் வகையில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத் திட்டங்களை அரசாங்கம் கைவிட வேண்டும். வவுனியாவின் எல்லைப்புறமான நெடுங்கேணியில் கோத்தா- மஹிந்த அரசாங்கம் திட்டமிட்ட இனப்பரம்பலை மேற்கொண்டு வருகின்றது.

எல்லைப்புற கிராமங்களில் குடியேற்றப்படும் சாதாரண சிங்கள மக்களையும், விவசாயிகளையும் பகடைக்காயாக வைத்துக்கொண்டு தொடர்ச்சியாக இனமுறுகலை ஏற்படுத்தும் செயற்பாட்டை சிங்கள பௌத்த பேரினவாதம் முன்னெடுத்துவருவதுடன், அதன் மூலம் தனது ஆட்சியைத் தக்க வைக்க முயற்சிக்கின்றது.

அதுமட்டுமன்றி நாட்டின் வளமான பகுதிகளை பல்தேசியக் கம்பனிகளுக்கும், தனியாருக்கும் ஆயிரக்கணக்கில் தாரை வார்க்கும் அரசாங்கம் நிலமற்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏறெடுத்தும் பார்க்காத இந்த அரசு, சாதாரண சிங்கள தமிழ் மக்களை வைத்துக்கொண்டு இனமுறுகலின் ஊடாக ஆட்சியைத் தக்க வைக்க விரும்புகின்றது.

எனவே தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பு என்பது நிலத் தொடர்ச்சியின் இருப்பாகவே அமைந்து காணப்படுகின்றது. அதனை திட்டமிட்டு இல்லாமல் செய்யும் செயற்பாட்டை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது- என்றுள்ளது. (து-110)

**என்னதான் இஞ்ச சாதிப்பிரச்சினை இல்லாமல் போனாலும்கூட, வெளிநாட்டில இருக்கிறவை அதை அவ்வளவு லேசில விடமாட்டினம்போல. ஏனெண்டால் இப்ப அதைவைச்சு நிறைய புரஜெக்ட் எழுதலாம், உழைக்கலாம், இஞ்ச உள்ளவையை உசுப்பேத்தி சாதி அரசியல் செய்யலாம் எண்டு நிறைய இலாபம் இருக்கு. அதால சாதிகள் தன்ர பாட்டில இல்லாமல் போய்க்கொண்டிருந்தாலும், இப்பிடியான சில கட்சியளும், வெளிநாட்டு சாதிப்பிரியர்களும் அதை அணையவிடாமல் எப்பவும் எரிஞ்சு கொண்டிருக்கிறதைத்தான் விரும்புகினம். உதாரணத்துக்கு கிட்டடியில வலிகாமத்தில நடந்த ஒரு சண்டையைச் சொல்லலாம்.**


**உண்மையா அது ரண்டு குழுக்களின்ர மோதல். ஒரு சவாரியில தொடங்கின கொளுவல் அப்பிடியே வளர்ந்து வளர்ந்து வீட்டுக்கபோய் அடிக்கிற அளவுக்கு வந்திட்டு. இப்பிடி வன்முறையைக் கையில எடுக்கிறவை ஆரா இருந்தாலும் அவையை 'ஒழுங்கா கவனிச்சு' ஜெயிலுக்க போடத்தான் வேணும். ஏனெண்டால் எந்தப் பிரச்சினைக்கும் இப்ப வாள்வெட்டும், பொல்லடியும் தான் தீர்வெண்ட மாதிரி நிலைமை போய்க்கொண்டிருக்கு. உதை முளையிலேயே கிள்ளவேணும் எண்டால் வாள், பொல்லு எண்டு வன்முறைக்கான ஆயுதங்களைத் தூக்கிற எல்லாரையும் வெளியில கெதியில வரமுடியாதபடி உள்ளுக்க போடோணும். சரி அது இருக்கட்டும்,இப்ப விசயத்துக்கு வருவம்.**

**உந்தச் சண்டையில சம்பந்தப்பட்ட ரண்டு குழுக்களும் வேற வேற சமூகங்களைச் சேர்ந்தவை எண்டாலும், சண்டைக்கும் சாதிக்கும் சம்பந்தமேயில்லை. ஆனால் வெளிநாட்டில இருக்கிற புலி எதிர்ப்பாளர்கள் சிலர் உடனடியா களத்தில குதிச்சு, காசெல்லாம் அனுப்பி இதை ஒரு சாதிச்சண்டை எண்டு காட்ட வெளிக்கிட்டினம். அதாலதான் சண்டை முடிஞ்சு ஒரு கிழமையால ஆர்ப்பாட்டமெல்லாம் வைச்சு , அதை ஒரு சாதிக்கொடுமை மாதிரி காட்ட வெளிக்கிட்டிச்சினம். சரி, இப்பிடி ஒரு குழு மோதலை சாதிச்சண்டையாக் காட்டுறதால புலம்பெயர் புலி எதிர்ப்பாளர்களுக்கு என்ன நன்மை? இருக்கு. இப்ப இஞ்ச எரியும் பிரச்சினையா சாதிப் பிரச்சினை , மதப்பிரச்சினை தான் இருக்கெண்டு காட்டினால் , எங்கட இனப்பிரச்சினை பின்னுக்கு போகும். அதைப்பற்றின கதையளை விட்டிட்டு நாங்களும் சாதி, மதம் எண்டு பிரிஞ்சுகொண்டு சண்டை பிடிப்பம். அதால அரசாங்கத்துக்கு தான் லாபம். அதுக்குத்தான் இந்தப் புலி எதிர்ப்புக்குஞ்சுகள் விழுந்தடிச்சுக் கொண்டு குழு மோதலையும் சாதிச்சண்டை எண்டு சாயம் பூசி சம்பாதிக்க நினைக்கினம். உண்மையில அந்தச் சண்டையில சம்பந்தப்பட்ட ஆக்களை பொலிஸ் கைது செய்து சட்ட நடவடிக்கையும் எடுத்திட்டு. ஆனால் அதுக்குப் பிறகு இப்பவும் அந்த இடத்துக்கு சாதியின் பெயரைச் சொல்லி, வாக்குப் பொறுக்கிற சில கட்சியள் போய் வந்து, அங்க இருக்கிற முரண்பாட்டை தீர்க்கவிடமால், அணைஞ்சு கொண்டு போற நெருப்பை ஊதி ஊதி பெரிசாக்கிறதில தான் குறியா இருக்கினம். உண்மையா அந்த மக்களில அக்கறை இருந்தால் இப்பிடியான சண்டைகள் இனியும் வராமல் இருக்கிறதுக்குத்தான் வழி சொல்லிக் குடுக்கோணுமே தவிர, கொம்பு சீவி விடுறதெல்லாம் அந்தப் பிரச்சினை தீரக்கூடாது எண்டதின்ர வெளிப்பாடு தான்.**

**இப்பிடியான ஆக்களிட்டயும், கட்சியளிட்டயும் சிக்காமல் அந்த மக்கள்தான் சரி எது, பிழை எது எண்டு கண்டுபிடிச்சு நடக்கவேணும்.**



- பட்சி



## வாகனங்களின் விலை அதிகரிக்கக்கூடும்

கொழும்பு, நவ. 15

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வாகன இறக்கு மதிக்கான நிவாரணம் வழங்காத காரணத்தால் எதிர்வரும் காலங்க ளில் வாகனங்களின் விலை அதி கரிக்கக்கூடும். வாகனங்களின் விலை குறைவடையும் என ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது என வாகன இறக்குமதியாளர் சங்கத் தின் தலைவர் இந்திக சம்பத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வெளிநாட்டு நாணயக் கையிருப்பு உயர்வடையும்வரை வாகனங் களை இறக்குமதி செய்ய முடியாது. குறைவான விலைக்கு வாகனங் களைப் பெறமுடியும் என்ற மக் களின் எதிர்பார்ப்பு இல்லாமலாக்கப் பட்டுள்ளது. தற்போதைய நிலைக்கு அமைய வாகனங்களின் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கக்கூடும். அதனால் இறக்குமதியாளர்களும், நுகர்வோரும் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வாகன இறக் குமதிக்கான நிவாரணம் வழங்கப் படவில்லை. மறுபுறம் நுகர்வோர் வாகனத்தைக் கொள்வனவு செய் வதற்கான நிவாரணமும் உள்ளடக் கப்படவில்லை. அதன் காரணமாக வாகன இறக்குமதியில் பெரும் நெருக்கடி நிலை ஏற்படுவதுடன், மாறுபட்ட பல பிரச்சினைகளும் தோற்றம்பெறும். ஆகவே இந்த விடயம் தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளோம். - என்றார். (கு-இ)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை

## கம்மன்பில அழுத்தம்திருத்தம்



**கொழும்பு, நவ. 15**

**நாட்டில் எரிபொருளுக்கான தட்டுப் பாடு இல்லையென வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீண்டும் தெரிவித்துள்ளார்.**

நீர்கொழும்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து ரைத்தபோதே அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்;

எரிபொருள் விலை அதி கரிக்கப்படுமாயின் அது நிதியமைச்சின் ஊடா கவே முன்னெடுக்கப் படும். நாட்டில் தட்டுப் பாடின்றி எரிபொருளை விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது - என்றார். (ம)

## மஹிந்த, பஸிலுக்கு ராஜயோகம் கிட்டும்

### ஜோதிடர் ஆருடம்

ராஜபக்ச குடும்பத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோ ருக்கு ராஜயோகம் கிட்டும் என்று பிரபல ஜோதிடர் கே.ஏ.யூ.சரச்சந்திர ஆருடம் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத் துக்கு முன்னர் அரசு உரிய முறை யில் தேர்தல் ஒன்றுக்கு செல்ல நேரிடும் என்ற கிரக நிலை உள்ளது. எதிர்வரும் நாட்களில் இடம்பெற வுள்ள சனி மற்றும் குரு பெயர்ச்சி காரணமாக நவம்பர் மாதம் 20 ஆம் திகதியின் பின்னர் நாட்டில் புதிய அரசியல் சக்தி ஒன்று முன்வ ரும். அந்த சக்தியால் எதிர்வரும் காலங்களில் நாட்டின் ஆட்சி கைப் பற்றப்படும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார். (ஒ-4)

## வடக்கு ரயில் சேவை இன்று இடைநிறுத்தம்

கொழும்பு, நவ.15

சீரற்ற காலநிலையால் ரயில் தடங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களால் வடக்குக்கான ரயில் சேவைகள் இன்று இடைநிறுத்தப் பட்டுள்ளன.


கொழும்பு-காங்கேசன்துறையிடையே இன்று மூன்று ரயில் சேவைகள் நடைபெற விருந்த நிலையில் அவை இடைநிறுத்தப் பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விஜய ரஜதஹன மற்றும் மீரிகமை ரயில் நிலையங்களுக்கு இடையே வெள்ளம் கார ணமாக ரயில் பாதையில் தாழிறக்கம் ஏற் பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரயில் பாதையைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சீரமைப்புப் பணி கள் நிறைவடையும் வரையில் கொழும்பு கோட்டையில் இருந்து வியாங்கொட ரயில் நிலையம் வரை ரயில் சேவைகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித் துள்ளார். (எ-இ)

### சமசமாஜக்கட்சி

## அரசிலிருந்து விலகுகிறது?



கொழும்பு நவ 15

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையி லான இலங்கை சமசமாஜகட்சி, அரசாங்கத்திலி ருந்து விலகுவ தற்குத் தீர்மா னித்துள்ளதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப் பினர்களின் அச்சுறுத்தல் மற்றும் அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள மக்கள் விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு கேட் டிருந்தபோதிலும் கட்சித் தலைவர்கள் அது தொடர்பில் சாதகமான பதில் எது வும் வழங்கவில்லை என்று சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலைமையின் மத்தியில் இந்த அரசாங்கத்துடன் கூட் டணி அமைத்திருக்கக்கூடாது என்பதே தனது நிலைப்பாடு என்று அவர் தெரி வித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்காலத்தில் இடம்பெ றவிருக்கும் கட்சி அரசியல் சபையில் ஆளும் தரப்பிலிருந்து விலகுவதற்கு யோசனை முன்வைக்க எதிர்பார்த்துள் ளேன் என்று அவர் மேலும் தெரிவித் துள்ளார். (கு-இ)



## கடன் மறுசீரமைப்பை ஏற்படுத்த முயற்சி

### கூறுகின்றார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, நவ. 15

நாட்டுக்கு நன்மை ஏற்படும் வகையில் கடன் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரி வித்துள்ளார்.

பாதீடு தொடர்பில் காணொலி ஊடாக மத்திய வங்கி ஏற்பாடு செய்திருந்த கலந் துரையாடலில் கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். வெளிநா டுகளிலிருந்து பெறப்பட்ட கடனை மீளச் செலுத்தும் இயலுமை எமக்குள்ளது. அத்துடன் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் கடன் மறுசீரமைப்பை ஏற்ப டுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக கடன் எல்லையை நீடித் தல் மற்றும் குறைந்த வட்டிக்கு கடனைப் பெறுதல் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என மத்திய வங் கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (கு-இ)

### சர்வதேசச் சட்ட ஆணைக்குழுவுக்கு

# இலங்கை சார்பில் போட்டியிட்ட மொஹான் பீரிஸ் தோல்வி

கொழும்பு, நவ. 15

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்ட ஆணைக்குழுவுக்கு இலங்கையின் சார்பில் பரிந்துரைசெய்யப்பட்டிருந்த முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், அதற்கான தேர்தலில் தோல்விய டைந்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற் றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 2008 - 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சட்டமா அதி பராகவும் 2013 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராகவும் பதவிவகித்தவர் என்ற அடிப்படையில் பொறுப்புக்கூறலை யும் நீதியையும் நிலைநாட்டத்தவறிய மொஹான் பீரிஸ், இனப்படுகொலை கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர் பில் விசாரணைகளை மேற்கொள்ளும் சர்வதேச சட்ட ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பில் உண் மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற் றிட்டம் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தது.

அதுமாத்திரமன்றி ஐ.நாவின் சர்வ தேச சட்ட ஆணைக்குழுவுக்கும் பிலிப் பைன்ஸ் சார்பில் ஹரி ரொக் மற்றும் இலங்கையின் சார்பில் மொஹான் பீரிஸ் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட் டமையை நிராகரிக்குமாறு வலியுறுத்தி சமூகநீதி மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் பிலிப்பைன் ஸைத் தளமாகக்கொண்டியங்கும் அமைப்பு விழிப்புணர்வுக் கலந்துரையா டல்களும் நடத்தியிருந்தது. இந்தநிலை யில், சர்வதேச சட்ட ஆணைக்குழுவின் ஆசிய பிராந்தியத்துக்கு 8 ஆசனங்க ளுக்கு 11 பேர் போட்டியிட்டனர். அதற் கான தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில், போதியளவு வாக்



குகள் கிடைக்கப்பெறாமல் மொஹான் பீரிஸ் தோல்வியடைந்துள்ளார்.

இந்தநிலையில், சர்வதேச சட்ட ஆணைக் குழுவுக்கு ஆசியப்பிராந்தியத்தின் சார் பில் இந்தியா, தாய்லாந்து, ஜப்பான், வியட்நாம், சீனா, கொரியா, சைபிரஸ் மற்றும் மொங்கோலியா ஆகிய நாடு களிலிருந்து பிரதிநிதிகள் தெரிவாகியுள் ளனர். (கு-இ)

# மக்கள் நலத்திட்டங்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு

## மானிப்பாய் பிரதேசசபை நடவடிக்கை

**யாழ்ப்பாணம்,நவ.15**

**அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில், மக்களின் வரிப்பணத்தில், சபை வரவு செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்குரிய நலத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்று வலி. தென்மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.**

பிரதேச சபையின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் 26 ஆவது வரவு செலவுத்திட்டத்தில் 3 ஆயிரத்து 500 பில்லியன் வருமானமாகக் காட்டப்படுகிறது. அதே சந்தர்ப்பத்தில் ஆயிரத்து 500 பில்லியன் ரூபா துண்டு விழும் தொகையாகக் காணப்படுகின்றது. அதேவேளை இலங்கையால் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை 3 ஆயிரம் பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. வருமானம் முழுவதும் கடனைச் செலுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் நிலையில் பல்வேறுபட்ட சலுகைகளும், அறிவிப்புகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 2,3 வருடங்களாக ஆளுநரின் அதிகாரத்துக்கு கீழிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கு உரிய நிதி வழங்கப்படவில்லை. உள்ளூராட்சியின் நிதியின் மூலமே சபைகள் தம்முடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றன. இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு எந்தவித நிதி ஒதுக்கீடும் இடம்பெறவில்லை. அதனால் நாங்கள் சபையின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

அந்தவகையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், முதியோருக்கான சத்துணவுத் திட்டம், மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதார உதவி, முன்பள்ளிப் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான சத்துணவுத் திட்டம், இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது-என்றார். (ஒ-4,125)

## மின்தடை

யாழ்ப்பாணம், நவ.15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா மாவட்டத்தில் ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர்மருதங்குளம், எல்லப்பர் மருதங்குளம் கோவிலடி, கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாமயிலங்குளம், மதுரநகர் கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம்குருக்களூர் மன்னார் வீதி ஆகிய பிரதேசங்களிலும்.

நாளை 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். மாவட்டத்தில்** 3வது குறுக்குத்தெரு, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, மாத்தனை, நெல்லண்டை வல்லிபுரம் கோவில் பருத்தித்துறை வீதி, புனிதநகர், சிவபிரகாசம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** வைரவப் புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலடி கப்பாச்சி, குருக்கள் புதுக்குளம் மணியார்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாடளாவிய ரீதியில் விரைவில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, நவ. 15



எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் மரக்கறிகளுக்கு பெருமளவில் தட்டுப்பாடு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் பொருளாளர் நிமல் அத்தநாயக்க இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சீரற்ற காலநிலை மற்றும் உரத் தட்டுப்பாடு காரணமாக டிசெம்பர் மாதத்துக்குள் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. பேலியகொடையில் உள்ள மெனிங் சந்தைக்கு தினசரி வழங்கப்படும் மரக்கறிகள் 60 வீதம் குறைந்துள்ளன. நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு நாளாந்தம் சுமார் 2 லட்சம் கிலோ மரக்கறிகள் கிடைத்துவந்த நிலையில் தற்போது ஒரு லட்சம் கிலோவுக்கும் குறைவாகவே கிடைக்கின்றது - என்றார். (ம)

## ஐ –றோட் வேலைத்திட்டத்தால் வெள்ள இடருக்குள் வயல்கள்

சாவகச்சேரி,நவ.15


ஐ -றோட் வேலைத்திட்டத்தால், ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன.

இந்தத் திட்டத்தின்கீழ் பாலங்கள், மதகுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனால் பாலங்கள் மற்றும் மதகுகளின் அருகே அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாதைகள் ஊடாக வெள்ளம் வெளியேறி, அயலில் உள்ள வயல்களில் தேக்கமடைந்துள்ளது. இதனால் பயிர்களை மூடி வெள்ளம் காணப்படுகின்றது.

சரசாலை வடக்கு, இல்வாரை, மாத்தளாய் வெளி, மட்டுவில் முதலியாவெளி, பெருங்குளம் வெளி, எழுதுமட்டுவாழ், கரம்பகம், உசன் போன்ற இடங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தால் அழிவடையவுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ஓ-4.9)

## கல்வி வலய நிர்வாகக் கிளையில் 4 அலுவலர்களுக்கு கொரோனா

வவுனியா, நவ. 15



வவுனியா தெற்கு வலயத்தின் நிர்வாகக் கிளை உத்தியோகத்தர்கள் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத்தொற்று மீண்டும் அதிகரித்துவரும் நிலையில் வவுனியா தெற்கு வலயத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் பரிசோதனையில் நிர்வாகக் கிளையில் பணியாற்றும் நான்கு உத்தியோகத்தர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தொற்றாளர்கள் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுடன் தொடர்புடையவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் வவுனியா தெற்கு வலயத்தின் நிர்வாகக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டு அதன் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (து-18)

## கசிப்பு காய்ச்சல்; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,நவ.15



நெல்லியடி, துன்னாலைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நெல்லியடிப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த நெல்லியடி பொலிஸார் கசிப்புக் காய்ச்சிய இடத்தை முற்றுகையிட்டனர்.

அங்கு ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு, 2 லட்சம் மில்லிலீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர். அத்துடன் அங்கிருந்த சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தனர். (ஒ-4,125)

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் ரி.ஐ.டி விசாரணைக்கு அழைப்பு

கிளிநொச்சி, நவ. 15

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் தவிசாளர் சு.சுரேன், கிளிநொச்சியிலுள்ள பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு நாளைமறுதினம் சமுகமளிக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பலரும் கொழும்பு 4ஆம் மாடியிலும், கிளிநொச்சியிலும் அமைந்துள்ள பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவின் அலுவலகங்களுக்கு விசாரணைகளுக்காக அழைத்து நீண்டநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், பச்சிலைப்பள்ளி சபையின் தவிசாளருக்கும் விசாரணைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (து-113)

## பரீட்சை வினாத்தாள் தயாரிப்பில் மாற்றம்!

கொழும்பு, நவ. 15

பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள் தயாரிப்பில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை கருத்திற்கொண்டு, இவ்வாறு மாற்றங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்த வகையில், தரம் 5 புலமைப் பரீட்சை, க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தர வினாத்தாள்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே, இது தொடர்பான சுற்றறிக்கை எதிர்வரும் காலத்தில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## முக்கொம்பன் கிராமத்துக்கு இரண்டாவது பேருந்துச் சேவை

கிளிநொச்சி,நவ.15
பாடசாலை ஆசிரியர்களின் நலன் கருதி, கிளிநொச்சி- முக்கொம்பன் கிராமத்துக்கு இரண்டாவது பேருந்துச் சேவை இன்று ஆரம்பமாகவுள்ளது.
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில், வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச்சபையின் பிரதம பிராந்திய முகாமையாளரின் உத்தரவில், கிளிநொச்சிக் கிளையால் இந்தப் பேருந்துச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.
யாழ்ப்பாணம்- பொன்னாலையில் இருந்து அதிகாலை 4.50 மணியளவில் தனது சேவையை ஆரம்பிக்கும் பேருந்து, மூளாய், சங்கானை, மருதனார்மடம், சுன்னாகத்தைச் சென்றடைந்து மீளவும் மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பரந்தன், பூநகரி 1ஆம் கட்டை வழியாக முக்கொம்பன் கிராமத்தைச் சென்றடையும். மீளவும் முக்கொம்பனில் இருந்து பிற்பகல் 1.35 மணிக்கு பயணிக்கும் பேருந்து அதே வழித்தடத்தில் பொன்னாலையை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஒ-4-13)

# அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியே பாதீடு முன்வைப்பு

## வடக்கு, கிழக்கு கண்டுகொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நிராகரிக்கின்றார் பஸில்



**கொழும்பு, நவ. 15**

**2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் வடக்கு, கிழக்கு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, வடக்கு, கிழக்கு என்று பாராது 9 மாகாணங்களையும் ஒன்றாகக்கருதி இன மத, பேதமின்றி வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது -என்றார்.**

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்றுச் சனிக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
'நாம் ஒரே நாடாகவே இந்த வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளோம்.
வடக்கு, கிழக்கு என்று பாராது 9 மாகாணங்களையும் ஒன்றாகக் கருதி பேதமின்றி இந்த வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
30 வருட போர் காரணமாக அந்தப்பிரதேசங்கள் பின்னடைந்திருந்தன. எமது அரசு வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் திட்டங்களின் கீழ் அந்தப் பிரதேசங்களை ஏனைய மாகாணங்களுக்கு சமமாக அபிவிருத்தி செய்தது. சகல உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டன. 17 மிதவைகளுக்குப் பதிலாக பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன. வடக்கில் 85 வீதம் வயல் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளன.
9 மாகாணங்களிலும் வாழும் மக்களையும் சமமாகக் கவனிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கு, கிழக்கு உட்பட 14 ஆயிரத்து 21 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனது கிராம சேவகர் பிரிவுக்கும் 3 மில்லியன் ரூபாதான் ஒதுக்கப்பட்டுள்ளது.
எந்தச் சந்தர்ப்பத்திலும் இன, மத மற்றும் பிரதேச பேதமின்றி சுதந்திரமாக வாழும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது' -என்றார். (ம-22)

## உப பொலிஸ் பரிசோதகர் மாரடைப்பால் உயிரிழப்பு

முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
கடமையில் இருந்தபோது நெஞ்சுவலி ஏற்பட்டு புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு அவர் உயிரிழந்தார்.
கேகாலை வரக்காப்பொலப் பகுதியைச் சேர்ந்த சுனில் ஜெயரத்தின (வயது 56) என்ற உப பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு உயிரிழந்தார்.
இவர் மாரடைப்பு ஏற்பட்டே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ஒ-4-19)

### பொருள்களின் விலையேற்றம்

# குறுகியகால தீர்வு தேடிய அரசின் முயற்சி தோல்வி!

## நிதி அமைச்சர் பஸில் ஒப்புதல்

கொழும்பு, நவ. 15
எந்த அரசும் பொருள்களின் விலைகளைக் குறைத்தது கிடையாது. பொருள்களின் விலையேற்றப் பிரச்சினைக்கு குறுகியகால தீர்வு தேடி எமது நாடு மட்டுமன்றி ஏனைய நாடுகளும் தோல்வியடைந்தன என்று இவ்வாறு தெரிவித்துள்ளார் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
'எந்த அரசும் பொருள்களின் விலைகளைக் குறைத்தது கிடையாது. பொருள்களின் விலையேற்ற பிரச்சினைக்கு குறுகியகாலத் தீர்வு தேடி எமது நாடு மட்டுமன்றி ஏனைய நாடுகளும் தோல்வியடைந்தன. உற்பத்தியை அதிகரித்து பொருள்களை சந்தையில் இலகுவாகப் பெறக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் பொருள்களின் விலைகளைக் குறைக்க வேறு அணுகுமுறையை முன்வைத்துள்ளோம்.
இறக்குமதி செய்யும் பொருள்களின் வரிகள் அதிகரிக்கும்போது விலைகள் உயரும். பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க ஆவன செய்யப்படும். பொருள்களின் விலைகளில் மாற்றம் இருந்தாலும் தட்டுப்பாடின்றி அவை கிடைக்கும். முறையற்ற விதத்தில் பொருள்களின் விலைகளை அதிகரித்து மக்களின் பணத்தைச் சூறையாட வேண்டாம் என வியாபாரிகளிடம் கோருகின்றோம். பின்தங்கிய மக்களுக்கு நிவாரணம் மற்றும் சலுகை வழங்குவதற்காக 31 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
என்றார். (ம-22)

## அபகரிக்கப்பட்ட ஒழுங்கை பொதுமக்களின் பாவனைக்கு

பளை,நவ்.15
தனியார் ஒருவரால் அபகரிக்கப்பட்டிருந்த ஒழுங்கை, இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.
வேம்பொடுகேணிப் பிரிவு 2011 ஆம் ஆண்டு மீளக்குடியமர்வுக்கு கையளிக்கப்பட்ட வேளையில், பளை -இந்திராபுரம் கிராமத்தின் கிழக்கு எல்லைப்புறக் காணி, தனியார் ஒருவரால் அபகரிக்கப்பட்டு வேலி இடப்பட்டிருந்தது.
2019ஆம் ஆண்டு இந்திராபுரம் பகுதி மீளக்குடியமர்த்தப்பட்ட வேளையில், மக்கள் தமது போக்குவரத்து பாதை மூடி அடைக்கப்பட்டுள்ளது என்று பளை பிரதேச செயலகத்தில் முறையிட்டனர்.
பிரதேச செயலர் குறித்த காணி உரிமையாளரை அழைத்து மேலதிகமாக அடைக்கப்பட்ட பாதையை விடுவிக்குமாறு தெரிவித்தார். அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்தமையால், கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணைகளின் பின்னர் பாதையை விடுவிக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.
நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி, மூன்று மாதங்களாகியும் வேலியை அகற்ற காணி உரிமையாளர் மறுத்தார்.
இதனையடுத்து நீதிமன்ற அலுவலர்கள், பளைப் பிரதேச செயலகத்தினர், நில அளவைத் திணைக்களத்தினர் மற்றும் பளை பொலிஸார் பொதுமக்களின் பங்களிப்புடன் வேலியை அகற்றி பாதையை மக்கள் பாவனைக்கு திறந்து விட்டனர். (ஒ-4-9)

# மானிப்பாய் வீதி புனரமைப்பு: பாலங்கள், மதகுகள் மறைப்பு

### ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.15
மானிப்பாய்- பொன்னாலை வீதிப் புனரமைப்பின்போது, பாலங்கள் மற்றும் மதகுகள் மறைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சீராக புனரமைக்க வேண்டும் என்று வலி.மேற்கு பிரதேசசபை, வடக்கு மாகாண ஆளுநரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.
குறித்த வீதி புனரமைப்பின்போது மானிப்பாய்க்கும், சங்கானைக்கும் இடையே பெரியதும் சிறியதுமாக ஆறு வரையான மதகுகள் புனரமைக்கப்படாமல் காப்பெற் இடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த மதகுகள் அடுத்து வரும் சில ஆண்டுகளிலேயே இடிந்து விழும் அபாயத்தில் உள்ளன. எனவே வீதிப் புனரமைப்பின்போது வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட அனைத்து மதகுகளும் புனரமைக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று சபை உறுப்பினர் ந.பொன்ராசா பிரதேசசபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கடிதம் மூலம் கோரியிருந்தார். இதையடுத்தே, வலி. மேற்கு பிரதேசசபை, வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.
கடிதத்தின் பிரதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், யாழ். மாவட்டச் செயலர் மற்றும் வலி. மேற்கு பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.
(ஒ-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# அவமானப்படுத்தலும் அறுவடையும்

நுணலும் தன் வாயால் கெடும். அதேபோன்றுதான் ராஜபக்ச அரசாங்கமும் தனது வாக்குவங்கியை தன் வாயால் சிதைக்கத் தொடங்கியுள்ளது. பல மாதங்களாக நீடித்த அதிபர்– ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டத்துக்கு, இப்போதைய பட்ஜெட்டில் தீர்வை முன்வைத்துள்ளது. ஆயினும் அதனால் அரசாங்கத்துக்கு எந்தவொரு நல்லபெயரும் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் இந்தத் தீர்வை அரசாங்கம் விரும்பி வழங்கவில்லை. அதிபர்– ஆசிரியர்களின் இடைவிடாத போராட்டத்தால் உண்டான அழுத்தம் காரணமாகவே, வேறுவழியின்றி அவர்களின் சம்பளமுரண்பாட்டுக்கு தீர்வை முன்வைக்கவேண்டிய கட்டாயம் ராஜபக்சக்களுக்கு ஏற்பட்டிருந்தது. எனவேதான் ' இந்தத் தீர்வை அரசாங்கம் தரவில்லை, நாங்கள் போராடிப் பெற்றுக்கொண்டோம். ஆயினும் போராட்டக் காலத்தில் அரசாங்கம் எம் மீது கடுமையான அவதூறுகளை வாரியிறைத்தது. போராட்டத்தைக் குழப்ப வன்முறையைக் கையாண்டது. எனவே இந்த அரசாங்கம் என்னதான் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை முன்வைத்தாலும், அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் ஆதரவை இனி இழந்தே விட்டது' என அதிபர்– ஆசிரியர்களுக்கான தொழிற்சங்கங்கள் சொல்கின்றன.

இப்படியாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தரப்பின் ஆதரவை நிரந்தரமாக இழந்துபோன அரசாங்கம், இனிவரும் காலங்களில் ஒட்டுமொத்த அரசபணியாளர்களினதும் எதிர்ப்பையும் சம்பாதிக்கும் வகையில், " அரச சேவை நாட்டுக்குப் பெரும் சுமை" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார் நிதியமைச்சர் பஸில். " இலங்கை சுதந்திரமடைந்த சமயத்தில் 118 பேரில் ஒருவர் அரச ஊழியர் என்ற நிலை இருந்தது . ஆனால் இப்போதோ 13 பேரில் ஒருவர் அரச ஊழியர் என்னுமளவுக்கு வந்துள்ளது. நாடு தாங்கிக் கொள்ளமுடியாதளவுக்கு அரச சேவை விரிவடைந்து விட்டது" என்று தன் கூற்றுக்கு நியாயம் வேறு சொல்லியிருக்கிறார் அவர். நிதியமைச்சரின் இந்தக் கூற்று நாடெங்கும் அடுத்துவரப்போகும் நாள்களில் பெரும் அதிர்வலைகளை எழுப்பும் என்பது திண்ணம். ஏனெனில் சுமார் 13 லட்சத்துக்கும் அதிகமானோர் அரச ஊழியர்களாக உள்ளனர். பஸிலின் இந்தக் கூற்று , சகல அரச ஊழியர்களின் 'ஈகோவையும்' ஒருமுறை அசைக்கவே செய்யும். அதன் விளைவாக அரசாங்கத்துக்கு எதிரான போக்கை அவர்கள் கடைப்பிடிக்கும் நிலையே உருவாகும்.

என்னதான் 'கோழி மேய்ச்சாலும் கோர்ணமெந்தில மேய்க்கோணும்' எனப் பொதுவாக அரச சேவை கிண்டல டிக்கப்பட்டாலும், நாட்டின் அரச இயந்திரத்தை சீராகக் கொண்டு செல்வது இதே அரச பணித்தொகுதியே. பொதுப்பார்வைக்கு அரச உத்தியோகத்தர்கள் கதிரைக்கு பாரமாக, வெறுமனே சம்பளத்துக்காக மட்டுமே அலுவலகம் செல்பவர்கள் போலவே தோன்றும். ஆனால் உப்பில்லாவிட்டால் தானே உப்பின் அருமை தெரியும். அதைப்போல அரச பணியாளர்கள் , பணிப்புறக்கணிப்பைச் செய்யும்போதுதான் அவர்களில் நாமும் நாடும் எவ்வளவு தூரம் தங்கியிருக்கிறோம் என்பது புரியும். மருத்துவர்கள் முதல் சுத்திகரிப்பு பணியாளர்கள் வரை ஒவ்வொரு அரச சேவகரினதும் சேவையில் சிறிது தொய்வு ஏற்பட்டாலும் நாடு ஸ்தம்பிதமடையும் நிலையே உள்ளது. அந்தளவுக்கு அரச பணியாளர்களின் சேவை நாட்டுக்கு அத்தியாவசியமானது. ஒரு சில விதிவிலக்குகள் இருக்கக்கூடும். ஆனால், அதற்காக ஒட்டுமொத்த அரச ஊழியர்களும் நாட்டுக்குச் சுமை என்று பொத்தாம் பொதுவாக தூக்கியெறிவது எந்தவகையில் நியாயம்?

பஸில் சொன்னதுபோல, இலங்கை சுதந்திரமடைந்தபோது மிகச் சுருக்கமாக இருந்த அரச பணித்தொகுதி இன்று இப்படி விரிவடைந்திருப்பதற்கு நிறையக் காரணங்கள் உண்டு. அப்போது நாட்டின் நிர்வாகமோ, பொதுவசதிகளோ, உட்கட்டமைப்போ, துறைகளோ, பிற சேவைகளோ இப்போதுள்ளது போல விரிவானதாக இருக்கவில்லை. ஆனால் இப்போதோ நாளொரு துறையும், பொழுதொரு தேவையுமாக பல்கிப் பெருகியபடி உள்ளன. அவற்றுக்கு ஏற்றபடி நாட்டையும் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல அதற்குரிய பணித்தொகுதி அவசியம். அதனாலேயே புதிய புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. பணியாளர் எண்ணிக்கை அதிகரிப்பதும் இதனால் தான். இந்த யதார்த்தம் புரியாமல், ஏதோ மக்களின் தேவைகளை விட, சேவைகளின் தன்மையை விட ஊழியர்களின் எண்ணிக்கை மிதமிஞ்சிப் போய் இருப்பதாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச சொல்லியிருப்பது ஒட்டுமொத்த அரச பணியாளர்களையும் அவமானப்படுத்தவே செய்யும். ஆனால் அந்த அவமானப்படுத்தலுக்கான அறுவடையை இந்த அரசாங்கம் அனுபவிக்கத் தயாராகவே இருக்கவேண்டும்.




# இந்திய விவசாயிகள் பாணியில் கொழும்பை முடக்குவோம்!

## நாளை பின்வாங்கமாட்டோம் ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, நவ. 15

'கொரோனாவுக்கு மத்தியிலும் அன்று இந்திய விவசாயிகள் டில்லியைச் சுற்றிவளைத்தனர். அதேபோல எதிர்வரும் 16ஆம் திகதி நாம் கொழும்பைச் சுற்றிவளைப்போம். எந்தவொரு தண்டனையையும் ஏற்க தயார் நிலையிலேயே இருக்கின்றோம்' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

'இந்த அரசுக்கு எதிராக எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பு, ஹைட் பார்க் மைதானத்தில் ஐக்கிய மக்கள் சக்தியால் எதிர்ப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதனை குழப்புவதற்காக கொரோனா சட்டத்தை அரசு கையில் எடுத்துள்ளது. வழமையாக கட்டுப்பாடுகளை விதிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரே அரசிடம் கோருவார். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்துக்கு அஞ்சி, புதிய கட்டுப்பாடுகளை அறிவிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அரசு அறிவித்துள்ளது. எத்தடைவரினும் எமது போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை. அன்று டில்லியை இந்திய விவசாயிகள் சுற்றிவளைத்ததுபோல கொழும்பை நாம் சுற்றிவளைப்போம். இதற்காக சிறைச்சாலை செல்ல வேண்டிவரும். அதற்கு நாம் தயார். சிறைச்சாலை செல்லாமல் அரசியல் செய்ய முடியாது. ஹைட் பார்க்கில் அனுமதி மறுக்கப்படுமானால் ஒட்டுமொத்த கொழும்பையும் ஹைட் பார்க்காக மாற்ற வேண்டிவரும். இந்தப் போராட்டத்தில் பங்கேற்று அனைத்து மக்களும் அரசுக்கான தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும்- என்றார். (ம-44)

# முற்றாகத் தோல்வியடைந்த வரவு - செலவுத் திட்டம்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் விளாசல்

கொழும்பு, நவ. 15

2022ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் முற்றாகத் தோல்வியடைந்த வரவு - செலவுத் திட்டம். பதவிக்காக வாயை மூடிக்கொண்டிருக்க மாட்டேன் என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதியமைச்சர் சமர்ப்பித்த வரவு -செலவுத் திட்டம் தோல்வியடைந்த வரவு - செலவுத் திட்டம். இந்த வரவு - செலவுத் திட்டத்தால் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், சகல அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பொருள்களைப் பெற மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மீண்டும் சிறிமாவோவின் காலத்துக்கு நாடு சென்றுவிட்டது - என்றார். (ம)

நவம்பர்
2021



"சாகுமுன் உன் பாட்டன் நட்ட பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்."

– கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

# வரவு - செலவுத்திட்டம் தற்காப்பைக் கொண்டது



கொழும்பு, நவ. 15

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தற்காப்பை அடிப்படையாகக் கொண்டதே தவிர, அபிவிருத்தியை இலக்குவைத்து முன்வைக்கப்பட்டதல்ல என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தற்போது நாடு பெரும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளது. இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு கொரோனாவே காரணம்என அதன்மீது பழியைப் போடுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. ஆனால், 2020ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் நாட்டில் கொரோனா இருக்கவில்லை. அந்தக் காலாண்டில் எமது விவசாயம், தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருந்தன. அரிசி மாபியா உருவானது. அதனால் அரிசி விலை அதிகரித்தது. அதேபோன்று சீனி இறக்குமதி வரியை 25 சதவீதம் வரை குறைத்ததால் சீனி மாபியா உருவானது. இவை கொரோனா காரணமாக இடம்பெற்றவை அல்ல.

இவ்வாறான நிலையில் நாடு தற்போது முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு இந்த வரவு - செலவுத் திட்டம் எத்தகைய தீர்வையும் முன்வைக்கவில்லை. நாட்டில் தற்போது சமையல் எரிவாயு தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு, விவசாயிகளுக்கான உரம் போன்ற பிரச்சினைகள் பெரும் பிரச்சினைகளாக தலைதூக்கியுள்ள நிலையில், இந்த வரவு - செலவுத்திட்டத்தில் அதற்கான தீர்வுகள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

இவை ஒருபுறமிருக்க, நிதிப் பிரச்சினையை தீர்க்க அரசு பணம் அச்சிடும் தீர்மானத்தை எடுத்தது. 2019ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட்வரை 2.8 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது. உற்பத்தி இல்லாமல் பணம் அச்சிடப்பட்டால் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பதை தடுக்க முடியாது. பணம் அச்சிடும்போது பணவீக்கம் அதிகரிக்கின்றது. கடந்த ஒக்ரோபர் மாதம் நாட்டின் பணவீக்கம் 7.6 வீதமாகும். அடுத்த வருடம் பணவீக்கத்தை 5.5 வீதமாகக் குறைப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தளவு பொருள்களின் விலை அதிகரிக்கும்போது எப்படி பணவீக்கத்தைக் குறைக்க முடியும்? அடுத்த வருடமாகும்போது பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். ஏனெனில் அடுத்த வருடம் 3 இலட்சம் கோடி ரூபா கடன் பெறுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கடனை சாதாரண விவசாயிகள், அரச ஊழியர்களிடமே அரசு பெறப்போகின்றது.

அதனால் இந்த அரசும், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவும் தற்காப்பை அடிப்படையாகக்கொண்டே வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்திருக்கின்றனரே தவிர அபிவிருத்தியை இலக்குவைத்து வரவு - செலவுத்திட்டத்தை முன்வைக்கவில்லை' -என்றார். (ம-22)



## முல்லைத்தீவு பேருந்து நிலைய புனரமைப்பில் குறைபாடுகள்

### பிரதேசசபை சுட்டிக்காட்டு

கிளிநொச்சி,நவ.15

முல்லைத்தீவு பேருந்து நிலையம், நகர அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் பல குறைபாடுகள் இருப்பதால், பேருந்து நிலையத்தை சட்டபூர்வமாக கையேற்க கரைதுறைப்பற்று பிரதேசசபை பின்னடித்துள்ளது.

பேருந்து நிலையத்தில் கட்டுமானப் பணிகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்படவில்லை. பேருந்துகளை நிறுத்த, உள்ளே, வெளியே எடுத்துச்செல்ல மேலதிக வசதிகள் செய்யப்படவில்லை. இது தொடர்பில் மாவட்டச் செயலர் தலைமையில் பிரதேசசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, தனியார் பேருந்து போக்குவரத்துச் சங்க உறுப்பினர்கள், இலங்கை போக்குவரத்துச் சபை பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றிய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பேருந்து நிலையத்தில் இரண்டாம் கட்டப் புனரமைப்பில் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என்று அதிகாரிகள் உறுதியளித்தனர். அதனால் திருத்த வேலைகள் நிறைவடைந்த பின்னரே, பேருந்து நிலையத்தை பாவனைக்குட்படுத்த முடியும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதனால் பிரதேசசபை இதுவரை சட்ட பூர்வமாக பேருந்து நிலையத்தை கையேற்கவில்லை. பாவனைக்குட்படுத்தவும் இல்லை என்று பிரதேசசபை உறுப்பினர் க.தவராசா தெரிவித்துள்ளார். (ஒ-4-13)

## பற்சிகிச்சை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.15

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தின் ஏற்பாட்டில், ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை மாணவர்களுக்கு பற்சிகிச்சை கருத்தரங்கும் பல்துலக்கும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஓய்வுபெற்ற பாடசாலை பற்சிகிச்சையாளர் திருமதி ந.இராசதுரை கலந்துகொண்டு விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கினார். (ச)

## கொடிகாமத்தில் தடுப்பூசி முகாம்

கொடிகாமம், நவ.15

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை கொடிகாமம் பிரதேச மருத்துவமனையில் கொவிட் தடுப்பூசி வழங்கும் விசேட முகாம் நடைபெறவுள்ளது என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

20 வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரை கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் பெறமுடியும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரவு உணவு



கொடிகாமம், நவ.15

கொடிகாமம் மத்தி பிரதேசத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினரால் இரவு உணவு வழங்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினரின் நண்பர் முழங்காவிலைச் சேர்ந்த பா.ஹம்சனின் 10 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் உலர் உணவுப் பொருள்களை பிரதேசசபை உறுப்பினர் வழங்கி வைத்தார். (ச-159)

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வாசிப்பு முகாம்



கொடிகாமம், நவ.15

கைதடி, குருசாமி வித்தியாலயத்தில் தரம் 3, தரம் 4 ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வாசிப்பு முகாம் பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ச-159)

## பாதிக்கப்பட்டோருக்கு உலர்உணவுப் பொதி

சாவகச்சேரி, நவ.15

தென்மராட்சியில் அண்மையில் பெய்த பெருமழையால், பாதிக்கப்பட்ட 49 குடும்பங்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 1983 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தர மாணவர்களின் நிதிப்பங்களிப்பில், அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி வடக்கு, கல்வயல், கோயிற்குடியிருப்பு, மண்டுவில் மற்றும் அல்லாரை போன்ற பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கே சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-9)

## ஊரடங்கால் பாதித்தோருக்கு உலர் உணவுப் பொதிகள்

சாவகச்சேரி, நவ.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 30 சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-9)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வாழ்க்கைத்துணைக்கு ஏற்பட்டிருந்த பிரச்சினை தீரும். புதிய விடயங்களில் கவனமாகக் காலை எடுத்து வையுங்கள். எதிர்காலம் பற்றிய கவலை ஒன்று சரியாகி நிம்மதி பிறக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாள். உறவினரை சந்தித்து மகிழ்வீர்கள். சகோதர சகோதரிகளுடன் இருந்த சிறு பிரச்சினை தீரும். கலகலப்பும் சந்தோஷமும் உண்டாகும்.

**மிதுனம் :** குழந்தைகள் பற்றிய மனஅழுத்தம் சரியாகும். சிலருக்கு உடல்நிலை சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாதீர்கள்.

**கடகம்:** பிறரிடம் கனிவாகப் பேசுவீர்கள். ஆபரணம் சேரும். எதிர்பாராத பணவரவு உண்டாகும். பணியாளர்களால் பணிகளில் தாமதம் ஏற்படக் கூடும். தெய்வவழிபாடு அமைதியைத் தரும்.

**சிம்மம்:** இன்று உணவு விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். உங்களை பற்றி யாரேனும் அதிகமாக பாராட்டினால் மயங்க வேண்டாம். வெற்றி வாய்ப்பு வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** தள்ளிப்போன வழக்கு சாதகமாகும். உறவினர் இடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். இழுபறியாக இருந்த விடயங்கள் எல்லாம் இன்று முடிவடையும். தாயார் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** இன்றைய நாள் சுறுசுறுப்பு நிறைந்ததாகக் காணப்படும். ஆடை, ஆபரணங்களுக்காக அதிகமாக செலவு செய்வீர்கள். தாயாருக்கும் உங்களுக்கும் சண்டை வராமல் பார்த்து கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** சுபநிகழ்ச்சி கூடிவரும். ஆசிரியர்களுக்கு நன்மை கூடுதலாகும். எதிர்பாராத பணவரவு உண்டு. மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். உழைக்க வேண்டி வரும்.

**தனுசு:** உறவினர் ஆதரவால் உங்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். தள்ளிப் போய்க்கொண்டிருந்த நல்ல விடயம் இன்று உறுதியாகும். இளைஞர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**மகரம்:** கல்விக்காக செலவுகள் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். தகுந்த நேரத்தில் செயற்பட்டு ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்வீர்கள். பெரியவர்களுக்கு உதவி செய்து அவர்களின் வாழ்த்தைப் பெறுவீர்கள்.

**கும்பம்:** உங்களால் தந்தைக்கும் அவரால் உங்களுக்கும் நன்மை உண்டு. சிக்கலை ஊகித்து அதிலிருந்து முறையாக மீளுவீர்கள். பணி, தொழில் சிறக்கும். முருக வழிபாடு வழிபட நன்மை தரும்.

**மீனம்:** பரபரப்பான நாள். பயணம் தொடர்பாக சுப செய்தி வரும். ரகசியங்களை அவசரப்பட்டு யாரிடமும் பகிரவேண்டாம். சரியான தீர்மானங்களை முறையாக எடுத்து நிம்மதி அடைவீர்கள்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 2021 -2022

குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவகிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதை பார்ப்போம்.






அன்புக்குக் கட்டுப்பட்டு நடக்கும் மிதுன ராசி அன்பர்களே... இதுவரை உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் அமர்ந்து உங்களைக் கலங்க வைத்த குருபகவான் வரும் 13.11.2021 அன்று ஒன்பதாம் இடத்துக்கு நகர்கிறார். ஓடிப்போனவனுக்கு ஒன்பதில் குரு என்பது ஜோதிட வாக்கு. அதற்கேற்ப இனி எல்லாம் மாறும். சோர்வாகவும் நம்பிக்கை இழந்தும் காணப்பட்ட நீங்கள் இனி உற்சாகமடைவீர்கள். உங்களின் பாக்கியஸ்தானமான கும்பராசியில் குருபகவான் சஞ்சரிக்கும் இந்தக் காலகட்டம் எல்லா வகையிலும் உங்கள் நலனை உறுதி செய்வதாகவே இருக்கும்.

எப்போதும் குருவின் ஸ்தான பலத்தை விடப் பார்வை பலம் அனுகூலமாகும் என்பார்கள். உங்களுக்கு ஸ்தான பலத்தைப் போலவே பார்வை பலமும் சாதகமாகிறது. குருபகவான் உங்கள் ராசியையே பார்ப்பது மிகவும் நல்ல விஷயம். எப்போதும் புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். இதுவரை நீங்கள் பார்த்த வேலைக்கான பலன் கைமேல் வரும். குடும்பத்தில் தேவையற்ற அழுத்தம், மனப்பாரங்கள் இனி நீங்கும். கலகலப்பாக இருப்பீர்கள். மனம்விட்டுப் பேசுவீர்கள்.

அதேபோன்று குருபகவான் உங்களின் பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் பொருளாதார நன்மைகள் கிடைக்கும். இதுவரை வாங்கியிருந்த கடனைக் கொடுத்து முடிப்பீர்கள்.

### 13.11.2021 முதல் 30.12.2021 வரை

இந்தக் காலகட்டங்களில் குருபகவான் அவிட்ட நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்வதால் சின்னச் சின்னப் பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். அவமானங்களும் சின்னச் சின்ன விபத்துகளும் ஏற்படலாம். எனவே செயல்களில் சிறு நிதானம் தேவை. புதிய வீடுமனை வாங்கும்போது ரொம்பவே எச்சரிக்கை அவசியம். சட்டப்படியே எதையும் செய்யுங்கள். சகோதர வகையில் தேவையற்ற சங்கடங்கள் ஏற்படலாம் என்பதால் நிதானம் தேவை. யாரோடும் வாக்குவாதம் செய்வதை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.

### 31.12.2021 முதல் 02.03.2022 வரை

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் சஞ்சாரம் செய்வதால் மனக்குழப்பங்கள், தேவையற்ற பதற்றம் உண்டாகும். சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் உண்டாகும். வீட்டிலும் கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. உறவினர்களிடம் கடுமை காட்டாமல் இருக்க வேண்டியது அவசியம்.

### 02.03.2022 முதல் 13.04.2022 வரை

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்வதால் வாழ்க்கைத் துணையோடு விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மை தரும். வீண் கவலைகள் மனதில் அதிகரிக்கும். தேவையற்ற விஷயங்களை வீட்டில் பேசிகொண்டிருக்காதீர்கள். பணிச்சுமை அதிகரிக்கும்.

இடமாற்றமும் ஏற்படலாம். எதற்கெடுத்தாலும் உறவுகளோடு சண்டைக்கு நிற்காதீர்கள். திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். பதவி உயர்வு தேடிவரும்.

குரு உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டைப் பார்ப்பதால் வியாபாரத்தில் இருந்து தேக்க நிலை மாறும்.

**மொத்தத்தில் இந்த குரு மாற்றம் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகப்படுத்துவதாக அமையும். வெற்றிவாய்ப்புகள் தேடிவரும்.**

# திருமணம் செய்துகொள்ள அசாஞ்சேவுக்கு அனுமதி!

லண்டன், நவ. 15

லண்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள விக்கி லீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே திருமணம் செய்து கொள்வதற்கு இங்கிலாந்து அரசு அனுமதி வழங்கியுள்ளது. அமெரிக்காவினதும் ஏனைய உலக வல்லரசுகளினதும் இரகசிய ஆவணங்களை 'ஹக்' செய்து விக்கிலீக்ஸில் வெளியிட்டார் ஜூலியன் அசாஞ்சே.

இதையடுத்து அவரைக் கைதுசெய்வதற்கு அமெரிக்கா முனைப்புக் காட்டியது.

இந்த நிலையில் அசாஞ்சே இங்கிலாந்தில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்தார். தூதரகத்தில் ஒருவர் தஞ்சமடைந்தால் அவருக்கு அந்தத் தூதரகம் தஞ்சம் கொடுத்தால் அவரைக் கைதுசெய்ய முடியாது. பின்னர் தஞ்சக் கோரிக்கையைத் தூதரகம் மறுத்ததை அடுத்து தூதரகத்துக்குள் புகுந்த இங்கிலாந்துப் பொலிஸார் அசாஞ்சேயைக் கைதுசெய்தனர்.

தூதகரத்தில் அசாஞ்சே தஞ்சமடைந்திருந்தபோது தென்னாபிரிக்க சட்டத்தரணி ஸ்ரெலா மேரியுடன் காதல் ஏற்பட்டது. இவர்கள் சேர்ந்து வாழ்ந்த நிலையில் அவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். எனினும் அவர்கள் இருவரும் இன்னமும் திருமணம் செய்துகொள்ளவில்லை. இந்த நிலையில் அசாஞ்சே தனது திருமணத்துக்கு அனுமதிக்கும்படி சிறைத் துறைக்கு விண்ணப்பித்திருந்தார். இது தொடர்பில் இங்கிலாந்து சிறைத்துறை மௌனம் காத்துவந்தது. இதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக ஸ்ரெலா மேரி தெரிவித்ததை அடுத்து அசாஞ்சே திருமணம் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

# பள்ளியில் பாலியல் துன்புறுத்தல்; கோவை மாணவி உயிர்மாய்ப்பு

சென்னை, நவ.15

கோவை, உக்கடம் பகுதியில் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் கடந்த வியாழக்கிழமை தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். தனது பள்ளியின் இயற்பியல் ஆசிரியரின் பாலியல் துன்புறுத்தல் காரணமாக மனமுடைந்த நிலையில் காணப்பட்ட மாணவி உயிர்மாய்த்துள்ளார் என அவரின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர். உயிர்மாய்த்துக் கொண்ட மாண[illegible]ின் அறையில் இருந்து கடிதம் ஒன்றை பொலிஸா[illegible]டுத்துள்ளனர். அதில் "யாரையும் சும்மா விடக்[illegible]து" என கடிதம் எழுதி வைத்துள்ளார். இப்போது [illegible]பியல் ஆசிரியரை கைது செய்துள்ள பொலி[illegible] தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களையும் விச[illegible] செய்து வருகின்றனர்.

அத்துடன், பள்ளியின் முன்னாள் முதல்[illegible] கைது செய்யக்கோரி உக்கடம் பகுதியில் பெ[illegible]ளும், பெண்கள் அமை[illegible]ரும் போராட்ட[illegible] பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-தி)

# ஜனாதிபதி செயலணியால் எந்தவித பயனும் இல்லை

## எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ. 15**

**பசுமை விவசாயத்துக்காக 14 உறுப்பினர்கள் கொண்ட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளபோதிலும் விவசாயத்துறையில் தேர்ச்சியும் அநுபவம் உள்ள நிபுணர்களோ துறைசார்ந்தவர்களோ இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அத்தகைய செயலணிக்கு இந்த நாட்டில் வரி செலுத்துவோரின் பணம் ஏன் ஒதுக்கப்பட்டது? என்றும் கேள்வி எழுப்பினார்.

14 பேர் கொண்ட கும்பலால் இந்த நாட்டில் விவசாயம் தொடர்பில் முடிவெடுக்க முடியுமா? தற்போதைய அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு- செலவுத் திட்டத்தில் விவசாயம் தொடர்பான தொலைநோக்குப் பார்வை எதுவும் இடம் பெறவில்லை

அரசாங்கம் முன்வைத்துள்ள இந்த வரவு -செலவுத் திட்டம் அபிவிருத்திக்கான ஒரு வரவு -செலவுத் திட்டமல்ல.

பயிர்கள் சேதம் அடைந்தால் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதாக உறுதியளித்த அரசாங்கம், இந்த வரவு -செலவுத் திட்டத்தில் இதற்காக ஐந்து சதம்கூட ஒதுக்கீடு செய்யவில்லை.

உணவுப் பாதுகாப்பு சம்பந்தமாகவும் தீர்வில்லை. - என்றார். (த-இ)

# நாடாளுமன்றுக்கு தகவல் வழங்காமலிருக்க முடியாது!

## ரணில் சுட்டிக்காட்டு

ஏதேனும் ஓர் உடன்படிக்கை பற்றிக் கேள்வி எழுப்பும்போது அது சம்பந்தமாக நாடாளுமன்றத்துக்கு தகவல்களை வழங்க அமைச்சர்கள் அரசமைப்புச் சட்டத்தின் படி கடமைப்பட்டுள்ளனர் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர்கள் நாடாளுமன்றத்துக்கு தகவல் வழங்குவதை தவிர்க்கும் உடன்படிக்கைகள் பற்றி நான் பேச விரும்புகிறேன். அரசமைப்புச் சட்டத்தின் 43 ஆவது சரத்தின்கீழ் அமைச்சர்கள் நாடாளுமன்றத்துக்கு கூட்டாக பொறுப்புக் கூற வேண்டும்.

நாடாளுமன்ற விவகாரம் சம்பந்தமான சட்ட அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளது. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். இதற்கு அமைய நாடாளுமன்ற அதிகாரம் மற்றும் சிறப்புரிமைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளுக்கு மேலதிகமாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் உரிமைகளும் எமக்குள்ளன. இந்தச் சகல சிறப்புரிமைகளும், நாட்டின் சாதாரண சட்டத்தின் பகுதிகள் எனவும் அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# முறையான வடிகாலில்லை வீதியில் தேங்கும் வெள்ளம்

யாழ்ப்பாணம்,நவ.15

வலிகாமம்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம் பெரியதம்பிரான் - இறாத்தலடி பிரதான வீதிக்கு முறையான வடிகால் அமைக்கப்படாத காரணத்தால், மழை காலங்களில் வெள்ளம் தேங்குவதுடன், மக்களின் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியால் காட்டுப்புலம், பாண்டவெட்டை, இறாத்தலடி, வறுத்தோலை, சுழிபுரம் மேற்கு மற்றும் சுழிபுரம் மத்தி மக்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

சுழிபுரம் சந்தியுடன் இணையும் குறித்த வீதியின் தொடக்கப் பகுதியும், பெரியதம்பிரான் கோவில் முன்பாக காணப்படுகின்ற வீதியின் தொடர்ச்சிப் பகுதியும் ஒவ்வொரு வருடமும் வெள்ளம் தேங்கும் நிலைமையில் உள்ளது. எனவே முறையான வடிகால் அமைப்புக்களை அமைத்து, போக்குவரத்து இடையூறை நீக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-125)

# பயிர்கள் அழிவடைந்திருந்தால் இழப்பீடு வழங்க நடவடிக்கை!

முல்லைத்தீவு, நவ. 15

பயிர்கள் அழிவடைந்துள்ளதாக கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டால், விவசாயிகளுக்குரிய இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்த கனமழையால் நந்திக்கடலின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

நந்திக்கடல் பகுதிக்கு அருகேயுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதனால் தமது பயிர்கள் அழிவடைந்துள்ளன -என்றும் அவற்றுக்குரிய இழப்பீடு வழங்க வேண்டும்-என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சின்னாற்றினுடைய முகத்துவாரமும் திறக்கப்பட்டுள்ளது.

நந்திக்கடலினுடைய முகத்துவாரமும் உடைப்பெடுத்துள்ளது.

எனவே நீர் வடிய ஆரம்பித்திருக்கின்றது. நீர் முற்றாக வடிந்தவுடனேயே பாதிப்பு நிலைமைகள் குறித்து, ஆராய முடியும். நெற்பயிர்கள் சற்றுப் பெரிய அளவில் இருப்பதால் பயிர் நிலங்களில் நீர் தேங்கி இருந்தாலும், பயிர்கள் பெரிய அளவில் பாதிப்படைய வாய்ப்பிருக்காது. நந்திக்கடலை அண்மித்த விவசாய நிலங்களை நீர்மூடுகின்ற பிரச்சினைக்கு ஒரு திணைக்களம் மட்டும் முடிவெடுக்க முடியாது. இது பல திணைக்களங்களுடன் தொடர்புபட்ட விடயம். எனவே மக்களும் தமது தரப்பு யோசனைகளை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு வரையில் கொண்டுசெல்ல வேண்டும் - என்றார். (ம)

# அனுமதியின்றி மது விற்பனை சந்தேகநபர் கைது

அனுமதிப்பத்திரமின்றி மதுபான விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதி வீதி கம்பர்மலையில் அமைந்துள்ள வீடொன்றில் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து குறித்த வீடு முற்றுகையிடப்பட்டு, 4 ஆயிரத்து 140 மில்லிலீற்றர் மதுபானம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. 40 வயது வயதான சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்தனர். (4-125)

# ‘ரொபின் ஹூட்’ பட்ஜெட்!

## சரணடைந்தது சுதந்திரக்கட்சி

கொழும்பு, நவ.15

இருப்பவர்களிடமிருந்து பறித்து இல்லாதவர்களுக்கு வழங்கும் வகையில் ‘ரொபின் ஹூட்’ பாணியிலான பட்ஜெட்டையே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச முன்வைத்துள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம்வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சுதந்திரககட்சி உறுப்பினரான சாந்த பண்டார, நிதி அமைச்சர் பஸிலின் பாதீட்டை இவ்வாறு பாராட்டினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இவ்வாறு சாதகமானதொரு வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும் என நாம் நம்பவில்லை. மக்கள்மீது சுமைகள் திணிக்கப்படும் என்றே எதிர்பார்த்தோம். ஆனால் பஸில் ராஜபக்ச சிறப்பானதொரு வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இலங்கை ரொபின் ஹூட் என்றழைக்கப்படும் மாவீரர் ‘சூர சரதியல்’ போன்றே பஸில் செயற்பட்டுள்ளார்.

சூர சரதியல் என்பவர் இருப்பவர்களிடம் பறித்து, அவற்றை இல்லாதவர்களுக்கு வழங்கினார். அதேபோலவே பஸில் ராஜபக்சவும் மக்கள்மீது சுமைகளை திணிக்காது, அதிக இலாபம் உழைக்கும் நிறுவனங்களிடமிருந்து வரிகளை அறிவிட்டு, மக்களுக்கு வழங்கியுள்ளார். சூர சரதியில் பலவந்தமாகச் செய்தார். பஸில் ராஜபக்ச சட்ட பூர்வமாக செய்கின்றார்.

இது நெருக்கடியான - அதே போல சவால்மிகுந்த காலப்பகுதியாகும். அப்படி இருந்தும் மக்களுக்கான பாதீடு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை எதிரணி எதிர்பார்க்கவில்லை.

அதனால்தான் போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்த்து வைக்கப்பட்டதை விரும்பாதவர்களே இந்த பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிப்பார்கள்- என்றார். (எ-44)

# கொழும்பில் தேங்காய்க்கு தட்டுப்பாடு

கொழும்பு, நவ.15

சந்தையில் தற்போது தேங்காய்க்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் தேங்காய் ஒன்று 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் தேங்காய்க்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. தொடர்மழை காரணமாக தேங்காய் மட்டையை அகற்றுதல் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதால் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. தட்டுப்பாடு காரணமாக அதன் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது -என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# முன்னாள் எம்.பிக்களுக்கு உயரடுக்கு பாதுகாப்பு

**கொழும்பு, நவ. 15**

**30 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுமார் 15 மாதங்களாக உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, முன்னாள் ஆளுநர்கள் சிலருக்கும் உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட இந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேர்ச்சிபெற்ற தலா இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புபெற்ற பிரமுகர்கள் பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாநகர சபையொன்றின் முன்னாள் தலைவர் ஒருவருக்கும் பல வருடங்களாக உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தநிலையில், அவரது இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் கடந்த வாரம் நீக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மக்கள் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் குழுவில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு சிறப்புரிமைப் பாதுகாப்பு வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

அதன் அடிப்படையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இவ்வாறு உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றதா? என பின்வரிசையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்கள், பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சர்கள் போன்ற விசேட நபர்களுக்கு முன் பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை இல்லை ஆனால், அவ்வாறு இல்லாதவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் சிக்கலுள்ளது. - என்று அவர் தெரிவித்தார். (து-இ)



## கடல்நீர் குடியிருப்புக்குள் புகுந்ததால் மக்கள் அவதி

சாவகச்சேரி, நவ.15

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு பிரிவில் கடல்நீர் குடியிருப்புகளுக்குள் புகுந்ததால் அங்குள்ள பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக தென்மராட்சிதெற்கு வயல்நிலங்களில் பயிர்களை மூடிக் காணப்பட்ட வெள்ளம் கடலேரிக்கு திறந்து விடப்பட்டமையால் கடலேரி நீர் குடியிருப்புக்களுக்குள் புகுந்துள்ளது.

இதனால் அங்கு வசிக்கும் 14 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

## குளங்கள் பெருக்கெடுப்பு குடிமனைக்குள் வெள்ளம்

யாழ்ப்பாணம்,நவ.15

கடந்த சில நாள்களாக பெய்த தொடர் மழையால், தாவளை இயற்றாலைப் பகுதியில் அமைந்துள்ள குளங்கள் பெருக்கெடுத்ததால், அருகில் வசிக்கும் குடியிருப்புக்கள் மற்றும் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தாவளை, இயற்றாலை மயான வீதியில் அமைந்துள்ள கேசரப்பிட்டி பெரியதம்பிரான் ஆலயக் குளம் மற்றும் உண்ணிய வயல்களுக்கு அண்மையில் அமைந்துள்ள இரண்டு குளங்களும் புனரமைப்பின்றிக் காணப்படுகின்றன.

எருவன் வயலுக்குச் செல்லும் வாய்க்காலும், உண்ணிய வயலுக்குச் செல்லும் வாய்க்காலுக்கும் இடையில் மண்போட்டு தூர்வாரப்பட்டுள்ளதால், வெள்ளம் தேக்கமடைந்திருந்தது.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைக்கு அறிவித்ததையடுத்து எருவன் பகுதியில் தூர்வாரப்பட்ட மணல் அகற்றப்பட்டு, வெள்ளம் வெளியேறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஒ-4-159)

## வவுனியாவில் பிடிக்கப்பட்டன 100 கட்டாக்காலி மாடுகள்

வவுனியா, நவ. 15

வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பகுதி வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வந்த நிலையில், கட்டாக்காலி மாடுகளை நகரசபையினர் பிடித்தனர்.

நகரில் போக்குவரத்து இடைஞ்சல், விபத்துக்களை குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் 100 க்கும் மேற்பட்ட மாடுகள் பிடிக்கப்பட்டன.

வவுனியாநகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், கோவிற்குளம், குருமன்காடு, வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளிலேயே நேற்றுமுன்தினம் இரவு 5 மணித்தியாலங்களில் 100க்கு மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.

அவை வவுனியா நகரசபை வளாகத்திலும், வேப்பங்குளம் நகரசபை வளாகத்திலும் அடைத்து வைக்கப்பட்டன. மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி ஆயிரம் ரூபா, தண்டம் ஆயிரம் ரூபா, ஒரு நாள் பராமரிப்புச் செலவு 300 ரூபா ஆகியவற்றை செலுத்தி மாடுகளை விடுவித்துக்கொள்ள முடியுமெனவும் மேலதிக நாள்களுக்கான பராமரிப்புச் செலவாக நாளாந்தம் 300ரூபா விதிக்கப்படுமெனவும் நகரசபையினர் தெரிவித்தனர். (து-இ)



## 1000 மரக்கன்றுகள் மன்னாரில் நடுகை

மன்னார், நவ.15

மன்னார், பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் கரித்தாஸ் வாழ் உதயத்தால் ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரித்தாஸ் வாழ் உதயத்தின் 40 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு அமைப்பின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலைமையில் சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரி, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். (ச- 56)

## உளவளத்துறைக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு,நவ.15

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட உளமருத்துவத் துறையால், உளவளத்துறை ஒரு வருட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கையை தொடர விரும்புபவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியுடன், க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் http:// medical.sjp.ac.lk.என்ற இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைத் தரவிறக்கம் செய்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். (ஒ-4)

## ஈழ சைவத்தமிழ் தந்தையர்கள் நினைவாக 5 செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.15

ஈழத்து சைவத்தமிழ் மறுமலர்ச்சி தந்தைகளான நாவலர் மற்றும் விபுலானந்தர் ஆகியோரை நினைவுறுத்தும் வகையில் 5 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அகில இலங்கை சைவ மகா சபை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைவாக நாவலர், விபுலானந்தர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை மாநகரங்களின் முக்கிய மையங்களில் நிறுவுதல், நாவலர், விபுலானந்தர் கல்விப் பணிகளுக்கு புத்துயிர் அளித்தல் (இவர்கள் பெயரில் இயங்கும் பாடசாலைகளில் மாணவர்களின் கல்விக்கு உந்துசக்தி அளித்தல் தரம் உயர்த்தல்), ஏழ்மையாலும், நோயாலும் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிவதொண்டர், சிவ மங்கையர் ஊடாக பிடியரிசி சேர்த்து மாதாந்தம் உதவும் செயன்முறையை பரவலாக்கல், விபுலானந்தரின் சிந்தனைகளைச்சுமந்து, மாணவர், இளையோர் தாய்மார்கள் இடையே உளநலச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், தமிழ் மண்ணில் இயற்கை விவசாயச் செயற்பாடுகளை கட்டமைப்புச்சார் இயக்கமாக முன்கொண்டு செல்லல் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஒ-4-125)


## 695 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.15
இலங்கையில் மேலும் 695 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 51 ஆயிரத்து 540 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## பி.எம்.சார்ள்ஸ் பதவி நீக்கிய தவிசாளருக்கு மீளவும் பதவி

மன்னார், நவ.15
மன்னார் பிரதேசசபையின் தவிசாளராக கடமையாற்றிய சாகுல் ஹமீது முகமது முஜாஹிர் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் திருமதி பி.எம்.சார்ள்ஸால் தவிசாளர் மற்றும் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அவர் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
பதவி நீக்கம் தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.சார்ள்ஸ் வர்த்தமானி ஊடாக அறிவித்திருந்த நிலையில், தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா அந்த வர்த்தமானியை இரத்துச் செய்து, புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் மன்னார் பிரதேச சபையின் தவிசாளராக சாகுல் ஹமீது முஹம்மது முஜாஹிர் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
"வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியநான், ஓய்வுபெற்ற அலுவலர் கந்தையா அரியநாயகம் அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சாகுல் ஹமீது முகமது முஜாஹிர் அவர்களை மன்னார் பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கு தீர்மானித்து, வடமாகாண ஆளுநரால் வெளியிடப்பட்ட 2021/9/ 13 /ஆம் திகதிய 2245/1 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்கிறேன்'' என்று -தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-213)

## புலம்பெயர்ந்தவரின் நிதியில் உலர்உணவுப் பொருள்கள்



முல்லைத்தீவு, நவ.15
புலம்பெயர்ந்தவர்களின் நிதியில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
தமிழர் அடுத்த தலைமுறை அமைப்பின் ஏற்பாட்டில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய பகுதிகளில் 50 குடும்பங்களுக்கும், சாவகச்சேரிப் பகுதியில் 50 குடும்பங்களுக்கும் இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.
இந்த உணவுப் பொருள்கள், கடந்த வெள்ளிக்கிழமை 14 ஆம் திகதி, கரைதுறைபற்று பிரதேச சபையின் உறுப்பினர் க.தவராசா, முன்னாள் அதிபர் க.சிவலிங்கம் ஆகியோர் அடங்கிய குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டது (ரி-113)

## மோதலை சமரசம் செய்ய சென்றவர் உயிரிழப்பு

வவுனியா, நவ.15
வவுனியா போகஸ்வெவ பகுதியில் இரு தரப்புக்கிடையே நடந்த மோதலை தடுக்கச் சென்றவர், தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.
இரு தரப்புக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியுள்ளது. அதைத் தடுக்கச் சென்ற 29 வயதான நபர் ஒருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தாக்குதலில் காயமடைந்தவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக போகஸ்வெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-110)

## நுளம்பு வலைகள் வழங்கி வைப்பு



மன்னார், நவ.15
மழையால் பாதிக்கப்பட்ட "பொருண்மியம்" நலிந்த குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
''பசி இல்லா மன்னார்'' அமைப்பின் ஏற்பாட்டில், அமெரிக்காவைச் சேர்ந்த கிருசாந்தன் மற்றும் குகன்யா தம்பதிகளின் நிதியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
மன்னார் சாந்திபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.
குறித்த நுளம்பு வலைகளை, பசி இல்லா மன்னார் அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ரி-1213)


சந்நிதி அக்கடமி
மானிப்பாய்
ஆங்கில வகுப்புக்கள்
தொடர்பு: 077 767 7773
(CS 41083)(3.6)

பெண் பணியாளர் தேவை
யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு பணிபுரிவதற்கு பெண் பிள்ளைகள் எதிர்பார்க்கப்படுகின்றது.
077 9637 483
(CS 18033) 1-6


### கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பணிபுரியும் சிவயோகராசா அவர்களின் அன்பு மாமியார்
**அமரர் சின்னத்தம்பி கனகம்மா**
அவர்கள் கடந்த (11.11.2021) வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பணியாளர் நலன்புரிச் சங்கம்
சித்தபோதனா வைத்தியசாலை, கைதடி
(CS 41078) (3.6)

### நினைவகலா நான்காம் ஆண்டு திருமகள் மலர்



அன்னை மடியில் 02.09.2004
ஆண்டவன் அடியில் 15.11.2017

**செல்வி சிவனேஸ்வரன் ரெபேக்கா**

வேதம் தொட்டு உண்மை ஞானம் தந்தவளே
விசுவாசத்தில் வல்லமையும் மகிமையும் உண்டாக
ஆவியானவருக்குள்ளாக - உன் நீண்ட நினைவுகளோடு
எம் முழுந்தாள்கள் முடங்க ஜெபத்துடன்
தாழ்ந்து பணிகிறோம்... ஆமென்.

மாலாவத்தை,
புலோலி வடமேற்கு,
புலோலி.
(NE 17811) (3.6)
குடும்பத்தினர்

### 31 ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 11 . 11 . 1963




இறப்பு 16 . 10 . 2021

கடந்த (16.10.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்
**அமரர் கனகரத்தினம் பத்மநாதன் (ஆசாரி)**
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.11.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தச்சன்தோப்பு
கைதடி.
(cs 41059) (2.6)
குடும்பத்தினர்.
076 374 2695

## மரண அறிவித்தல்

மண்ணில் 01 . 12 . 1944



விண்ணில் 13 . 11 . 2021

### அருட்பணி ஞா. எட்மன் மைக்கல் (OMI)

**குருத்துவம் : 21.12.1970**

அமலமரித்தியாகிகள் சபையை சேர்ந்தவரும், யாழ். பழைய பூங்கா வீதியை பிறப்பிட மாகக் கொண்டவருமான அருட்பணி ஞா.எட்மன் மைக்கல் - OMI நேற்று முன் தினம் (13.11.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானபிரகாசம் - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான டெய்சி சூசைப்பிள்ளை, லில்லி விக்ரோறியா ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரிராணி - இம்மானுவேல், றெஜினோல்ட்ரவிச்சந்திரன் - சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், தீபன் - ஏஞ்சலின், தீபா - சுரேந்திரா, சோபா - ஜெயந்தன், ஜெனார்த்தனி - சதீஸ்குமார் இராஜ சிங்கம், றுக்மா - டெம்பாட்டோல், ஷேமா - கபிரிகுருஸ் ஆகியோரின் அன்பு பேரனும், அடோனிஸ், சரோனா, தானியா, ஆரோன், Febian, Geethro,நிலா, ஜோதி, நுவான், எலைனி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத்திருப்பலி இன்று (15.11.2021) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாத சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை குருக்கள், துறவிகள், இறைமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| மேரிராணி | - 0033 7814 92722 | பிரான்ஸ் |
| ரவி | - 0033 7580 85280 | பிரான்ஸ் |
| இம்மானுவேல் | - 0033 7718 41089 | பிரான்ஸ் |
| தீபன் | - 0016 4729 81257 | கனடா |
| தீபா | - 0044 7481 459873 | லண்டன் |
| சோபா | - 0016 4770 07931 | கனடா |

பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cr 35885) (2.6)

---

வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## பழைய புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு பாவிக்க முடியாத நிலையிலுள்ள புத்தகங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை யாழ். வலயக் கல்வி அலுவலக நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் (முற்பகல். 8.30 - பிற்பகல் 4.15) பெற்று பூரணப்படுத்தி 22.11.2021 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**மு.இராதாகிருஷ்ணன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்.**

(CR 5905) (3/6)

---

## மரண அறிவித்தல்

### அருட்பணி ஞானபிரகாசம் எட்மன்ட் மைக்கல் அமதி



அருட்பணி ஞானபிரகாசம் எட்மன்ட் மைக்கல் அமதி அவர்கள் நேற்று முன் தினம் (13.11.2021) சனிக்கிழமை இறை பதமடைந்தார்.

இவரது உடல் யாழ் கொழும்புத்துறை புனித இயூஜின் டி மசிசனட் சிற்றாலயத்தில் இன்று (15.11.2021) திங்கட்கிழமை முற் பகல் 9.00 மணிவரை வைக்கப்பட் டிருக்கும் அதன் பின்பு முற்பகல் 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேரால யத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ் - புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்பணி இயூஜின் பெனடிக்ற், அமதி மாகாண முதல்வலர் - அமலமரித் தியாகிகள் சபை - யாழ்ப்பாணம்.**

(CS 41077) (3/6)

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 08 . 1941



மறைவு 12 . 11 . 2021

### திருமதி இராஜராஜேஸ்வரி வல்லிபுரம்

**(இளைப்பாறிய, ஆசிரியை, யா/றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை)**

திருமதி இராஜராஜேஸ்வரி வல்லிபுரம் அவர்கள் கடந்த (12.11.2021) வெள்ளிக் கிழமை இறைவனடி சேந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியனரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி, சிவஞானசுந்தரம், தாமோதரம்பிள்ளை, ஜெகநாதன், பரமேஸ்வரி, பார்த்த சாரதி, இந்திராணி, பத்மநாதன், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை வித்தியாபதி மற்றும் சத்தியவதி, ஶ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்தி முரளிதரன் (ஆசிரியை யா/றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை), காலஞ்சென்ற ஜெயந்தி வல்லிபுரம் மற்றும் சிவகுமார் (பொறியியலாளர், ஐக்கிய அமெரிக்கா), ராஜகுமார் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் முரளிதரன் மற்றும் மீனா சிவகுமார் (அமெரிக்கா), பாமினி ராஜகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கோபிகா, சங்கீர்த்தனன், சங்கீதா, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 35886) (3/6)

---

## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை சிவகுருநாதன்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப் பிள்ளை சிவகுருநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, பகவதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம், பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இந்திராணி (பூப்பிள்ளை) அவர்களின் அன்புக் கணவனும், சிவகுமார் (பிரான்ஸ்), செல்வகுமார் (கனடா), செல்வநாதன் (பிரான்ஸ்), விமலநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவிதா (பிரான்ஸ்), கௌசிகா (கனடா), லர்மினி (பிரான்ஸ்), பிரியந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருச்சிற்றம்பலம், மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பத்மாவதி, காலஞ் சென்றவர்களான முத்துலிங்கம், சிந்தாமணி, மற்றும் பூரணகாந்தி, சின்னம்மா, மனோன்மணி, கமலாதேவி, சோதிலிங்கம், காலஞ்சென்ற விஜயதாசன் ஆகியோரின் மைத்துனனும், சிந்துகா, சாருகா, சஜீவன், சஜிதன், ஷத்வீகா, சங்கீத், சங்கவி, ஒலிவியா, நோரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2021) செவ்வாய்க்கிழமை இலக்கம் 44/1 அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்கு முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 41081) (3/6)

# போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்

# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2022

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2022 ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து பின்வரும் வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 500.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குனர்கள் பதிவு செய்தல் - 2022"** எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2021.12.15 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

| உருப்படி இல | பொது பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுது பொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி பண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை , மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள், பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லா விதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகல வகையானரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுரெகுலேட்டர், காஸ் பனர்,காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணைஉறை, GS Towel) |
| A – 20 | அலுவலகஅடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறைமற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / x கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகல விதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிட நிர்மாணம், கட்டிட புனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மான வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், x-கதிர் அட்டை, x -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகல விதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள்,உணவுப்பொதிகள் மற்றும் குளீர்பானங்கள் போன்றவை) |

**நிபந்தனைகள்:**

01. வழங்கல்கள், சேவைகள் 2022 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபர நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம்
09. 021 222 3149 / 021 221 2482 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
10. உருப்படி இலக்கம் B [அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்கள]க்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
    தயாரிப்பு எல்லை [Product range]
    உற்பத்தியாளர் அங்கீகாரக்கடிதம் [Copy of manufacturer authorization letter]
    CDDA நகல்
    நிறுவுதல் அடிப்படை - [Installation Base] (ஏற்கனவே BES பகுதிக்கு இவை தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் மேலதிக புதிய தகவல்கள் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்கலாம்)

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

*மாதிரிவிண்ணப்படிவம்*

| | |
|---|---|
| காசுபற்றுச்சீட்டு/ காசுக்கட்டளை இல: | |
| திகதி: | |
| தொகை | |

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

1.நிறுவனத்தின் பெயர் :
2.நிறுவனத்தின் முகவரி :
3.தொலைபேசி இல. :
4.தொலைநகல் இல. :
5.மின்னஞ்சல் முகவரி :
6.வியாபாரப் பதிவுபெயர் :
(வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
7.VAT:பதிவு இலக்கம் :
8.கடன் வசதி பற்றிய விபரம் (காலஎல்லை/தொகை):

| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவை விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்பதுடன் ரூபா...........க்குரிய பற்றுச்சீட்டு/காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.

.......................... விண்ணப்பதாரியின் பெயர்

.......................... விண்ணப்பதாரியின் ஒப்பமும் நிறுவன இறப்பர் முத்திரையும்

.................. திகதி

(CR 35884) 1-6

### அரசுக்கு...

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதா? இல்லையா? என்ற முடிவை எடுப்பதற்கான பரந்துபட்ட பேச்சின் முதல் கட்டமே இந்தக் கலந்துரையாடல் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் செயற்பாடுகள் தொடர்பாக அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளன. அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன கட்சியைச் சார்ந்தோர், தம்மை மதிப்பதில்லை என்ற அதிருப்தியும் பங்காளிக் கட்சிகளிடையே உள்ளது.

தற்போது அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் மக்கள் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கு குறைந்துவிடக் கூடும் என்றும் பங்காளிக் கட்சிகள் அஞ்சுகின்றன. தங்களின் கருத்துக்களைச் செவிமடுக்காது செயற்படும் ராஜபக்ச தரப்பினருக்கு, "செக்" வைக்கும் ஒரு சந்தர்ப்பமாக வரவுசெலவுத் திட்டத்தை அவை கருதுகின்றன. அதனால் இந்தச் சந்தர்ப்பதில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கவே உதயன் கம்மன்பில வீட்டில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக அமெரிக்க நிறுவனத்துடன் அரசு மேற்கொண்ட ஒப்பந்தத்துக்கு பங்காளிக்கட்சிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றன. தேர்தல் காலத்தில் அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறி, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்றன என்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

அரசின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாகவும் சந்திப்பில் ஆராயப்படும் என்றும், இந்தச் சந்திப்பில் 11 கட்சிகள் பங்குபற்றவுள்ளன என்று அறியமுடிகின்றது. (எ-இ)

### ஆசிரியர்கள்...

பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரை எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதால் அதுவரை தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### சவேந்திர...

நாடாளுமன்ற உறுப்பினர் சாரா ஜோன்ஸ், அந்த நாட்டு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவைத் தடைசெய்யுங்கள்' என்ற வாசகத்துடனான பதாகையுடன் சாரா ஜோன்ஸ் அவரது உத்தியோகபூர்வ டுவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொலியொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

என்னுடைய தொகுதியில் வசிக்கும் தமிழ் சமூகத்தினர் மத்தியில் இலங்கையில் நடந்த போரின் வடுக்கள் இன்னமும் இருப்பதை உணர முடிகின்றது.

அது மட்டுமன்றி உலகில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் நீதியும் பொறுப்புக்கூறலும் உறுதிசெய்யப்படவேண்டும். இலங்கையிலும் உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களுக்காக நாம் அதைத் தொடர்ந்து வலியுறுத்தவேண்டும். என்றார்.

தொழிற்கட்சியின் சார்பாக பிரிட்டன் மத்திய க்ரொய்டொன் தொகுதியில் போட்டியிட்டு 2017 ஆம் ஆண்டு சாரா ஜோன்ஸ் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார். (எ-இ)

### கொரோனா பற்றி...

பாளரும், சுகாதார அமைச்சின் கொரோனா கட்டுப்படுத்தல் செயற்பாடுகளின் பிரதான ஒருங்கிணைப்பாளருமான மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை, மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கையில் சிறு அதிகரிப்பை அவதானிக்க முடிகின்றது.

இரு வாரங்களுக்குமுன்னர் 500 தொடக்கம் 550 ஆகக் காணப்பட்ட நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை தற்போது 650 முதல் 725 ஆக உயர்வடைந்துள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள 175 கொரோனா சிகிச்சை நிலையங்களில் 30 சதவீதமான தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது அவதானிக்கப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் சிறு அதிகரிப்பை இப்போதே கட்டுப்படுத்தாவிட்டால் கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட நிலைமைக்கே எதிர்வரும் வாரங்களில் மீண்டும் செல்ல வேண்டி ஏற்படும். சிறியளவிலான இந்தத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பை உதாசீனப்படுத்தக்கூடாது. காரணம் கொரோனா அபாயம் இன்னும் குறையவில்லை. அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றினால் புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் தடையின்றி அன்றாட வாழ்வை முன்னெடுத்துச் செல்ல முடியும். அவ்வாறில்லை எனில் நத்தார் மாதத்திலும், புத்தாண்டு பிறப்பின் போதும் கடந்த வருடங்களைப்போன்று கட்டுப்பாடுகளுடனேயே கொண்டாட்டங்களில் ஈடுபட வேண்டியேற்படும் - என்றார். (எ-இ)

### முடிந்தது...

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுகின்றபோதும், அடுத்த 15 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் கிடைக்கும். முன்னர் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்ட பல சுத்திகரிப்பு எண்ணெய்த் தாங்கிகள் அடுத்த சில வாரங்களில் இலங்கை வந்தடையும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித, அமைச்சர் மற்றும் அரசின் மோசமான நிர்வாகத்தாலேயே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது ஆசியாவின் மிகவும் பழமையான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம். 1961ஆம் ஆண்டு செயற்பட ஆரம்பித்த இந்த சுத்திகரிப்பு நிலையம் ஆசியாவின் அழியாத சுடர் என்று அழைக்கப்பட்டது. 51 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக இந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவுள்ளது. இது மிக மோசமான சூழ்நிலையாகும்.

உலக சந்தையில் கச்சா எண்ணெய்க்கு பற்றாக்குறை இல்லை. நாட்டுக்குத் தேவையான கச்சா எண்ணெயைக் கொண்டு வருவதற்கான கப்பல்களுக்கும் பற்றாக்குறை இல்லை. சுத்திகரிப்பு நிலையத்துக்கான அடுத்த இறக்குமதி டிசெம்பர்மாதம் 23ஆம்திகதியேநடைபெற இருக்கின்றது. அப்போது கடுமையான எரிபொருள் நெருக்கடி ஏற்படும்- என்றும் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார். (எ-இ)

### யாழ்ப்பாணத்து...

சகோதரனுடன் தங்கியிருந்த இவர், கடந்த இரண்டு மாதங்களாக மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார் எனக் கூறப்படுகின்றது.

இவர் கடந்த வியாழக்கிழமை மன்னார் ஆடைத் தொழிற்சாலை பணி முடிந்து மன்னார் பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றுள்ளார். அவர் ஆண் ஒருவருடன் உரையாடியவாறு செல்லும் காட்சி, பஸ் தரிப்பிடத்தில் உள்ள பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

அன்று மாலை 7 மணியளவில் பெண் ஒருவர் மன்னார் பாலத்தில் இருந்து கடலுக்குள் குதித்தார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்தது. பொலிஸார், கடற்படையினருடன் இணைந்து தேடுதல் நடத்தியபோதும் எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. கீர்த்தனாவே பாலத்தில் இருந்து குதித்திருக்கலாம் என்று தற்போது நம்பப்படுகின்றது.

கோந்தைப்பிட்டி கடற்கரையில் இருந்து நேற்றுமுன்தினம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்த நிலையில், பெண்ணின் தாயும், சகோதரரும் நேற்று சடலத்தை அடையாளம் காட்டினர்.

பெண்ணின் இறப்புக்கான காரணம் தெரியவில்லை என்று தெரிவித்த பொலிஸார், பெண்ணுடன் உரையாடிவாறு சென்றவர் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தனர். (எ-56,213,60)

### ஐ.நா...

அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள அவர், இந்தவிடயத்துடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவுகளைத் தனக்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரியுள்ளார். பிரதானமாக தொழிலாளர் உரிமைகள், அடிமைத்துவம், வலுக்கட்டாயமாகத் தொழிலில் ஈடுபடுத்துதல், சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துதல் உள்ளடங்கலாக அடிமைத்துவத்தின் சமகால வடிவங்களுடன் தொடர்புடைய தகவல்களை அனுப்பிவைக்கலாம் என்று ரொமோயா ஒபொகாடா தெரிவித்துள்ளார்.

இந்த விடயதானங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளை அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் ohchr srslaveryShun.org என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக ஐ.நா. வின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடாவுக்கு அனுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### கொரோனா காவு...

விக்கப்பட்டுள்ளதுடன், உயிரிழந்தவர்கள் 17 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயிரிழப்புகளுடன் இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 995 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

### கொரோனா...

கொரோனா தடுப்பு சுகாதார நடைமுறைகளின்படி பூந்தோட்டம் மின் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-18)

# அரசு வாக்குத் தவறினால் மீள போராட்டம் ஆரம்பம்

## ஆசிரியர், அதிபர் சேவை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளம் வைப்பிலிடப்படாவிட்டால் மீண்டும் தொடர் தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்படும். சுபோதினி குழு அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்தும் வரையில் தொடர்ந்து ஒன்றிணைந்து போராடுவோம்.

இவ்வாறு ஆசிரியர், அதிபர் சேவை முன்னணியின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர்அதிபர் தொழிற்சங்க போராட்டத்தில் தற்காலிக வெற்றியை பெற்றுக் கொண்டுள்ளோம். எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி ஆசிரியர், அதிபர்களின் சம்பளம் அதிகரிக்காமல் ஏதேனும் இழுபறி நிலை காணப்பட்டால் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி முதல் மீண்டும் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவோம்.

சுமார் நான்கு மாத காலமாக தொடர்ந்த போராட்டத்தை முடக்குவதற்கு அரசு பல்வேறு உத்திகளை பிரயோகித்தது. தொழிற்சங்கத்தினரது உரிமைக்கான போராட்டத்தை முடக்க அரசு மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன.

அரசு வழங்கியுள்ள வாக்குறுதியை நிறைவேற்றுமா என்பதில் சந்தேகம் காணப்படுகிறது. ஏனெனில் ஆட்சியாளர்கள் மீது அந்தளவுக்கு நம்பிக்கை உள்ளது. மூன்றில் ஒருபகுதி சம்பள அதிகரிப்புக்கு அமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஆசிரியர்களின் சம்பளம் 3 ஆயிரத்து 500 தொடக்கம் 11 ஆயிரம் ரூபா வரையிலும், அதிபர்களின் சம்பளம் 6 ஆயிரம் தொடக்கம் 12 ஆயிரம் ரூபா வரையிலும் வைப்பிலிடாவிடின் மீண்டும் தொடர் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவோம். என்றார். (எ-இ)

# அவுஸ்திரேலியா உலகச்சம்பியன்!

**டுபாய், நவ. 15**

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நியூஸிலாந்தை தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியது அவுஸ்திரேலிய அணி.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூஸிலாந்தின் ஆரம்ப வீரர்களாக கப்ரில், மிச்செல் இருவரும் களமிறங்கினார்கள். மிகவும் மந்தமான வகையில்தான் ஆரம்ப வீரர்கள் இருவரும் விளையாடினார்கள். 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மிச்செல். வில்லியம்சன் ஆரம்பத்தில் நிதானத்தைக் கையாண்டார். இதனால் முதல் 10 பந்துப்பரிமாற்றங்களில் 57 ஓட்டங்களையே நியூஸிலாந்து பெற்றது. அதன் பின்னர் படிப்படியாக அதிரடிக்குத் திரும்பினார் வில்லியம்சன்.



எனினும் கப்ரிலின் ஆட்டத்தில் மாற்றம் இல்லை. அவர் 35 பந்துகளில் 28 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். அதன் பின்னர் வேடிக்கை காட்டினார் வில்லியம்சன். குறிப்பாக மிச்செல் ஸ்ராக்கின் பந்துப்பரிமாற்றங்கள் வெளுத்து வாங்கப்பட்டன. 32 பந்துகளில் அரைச்சதம் கடந்த வில்லியம்சன் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் 4 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றது.

பந்துவீச்சில் ஹேசில்வூட் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஸ்ராக் 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 60 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து இலக்குகள் எதையும் கைப்பற்றவில்லை.

பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப வீரரும் அணித் தலைவருமான பின்ஞ் ஏமாற்றினார். அடுத்து வந்த மிச்செல் மார்ஷ் சிக்சருடன் ருத்ர தாண்டவத்தை ஆரம்பித்தார். அவருடன் வோர்ணரும் இணைந்து அதிரடிகாட்ட உலகக்கிண்ணத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தது அவுஸ்திரேலிய நியூஸிலாந்தின் பந்துவீச்சில் நேற்றுப் பதற்றம் தெரிந்தது. 11.3 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது அவுஸ்திரேலியா அதன் பின்னரும் அதிரடியைத் தொடர்ந்து கொண்டிருந்தார் மிச்செல். வோர்ணர் 38 பந்துகளில் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் மிச்செல் மார்ஷ், மக்ஸ்வெல் இணைந்து அதிரடியைக் கைவிடாமல் ஆட்டத்தை நகர்த்திக் கொண்டிருந்தனர். மிச்செல் 50 பந்துகளில் 77 ஓட்டங்களைக் குவிக்க 7 பந்துகள் மீதமிருக்க உலகச் சம்பியனானது அவுஸ்திரேலியா (ம)




## வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் **அக்ஷதை உயர்தர சைவ உணவகத்துக்கு**
கீழ்காணும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன

- துப்புரவுப் பணியாளர்கள் (முழு/ பகுதிநேரம்)
- அரையல் உதவியாளர் (முழு / பகுதி நேரம்)
- சமையல் பழகுபவர்கள்
- உணவு பரிமாறுபவர்கள்
- மரக்கறி வெட்டுபவர்கள்

077 711 2269

(cs 41080)(2.6)


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**திரு.சிங்காரவேலு யோகநாதன்**
(உரிமையாளர் Ogesta)

தோற்றம்
24.02.1957

மறைவு
01.12.2017

திதி : துவாதசி (15.11.2021)

அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பு வழிகாட்டிய எம் தெய்வத்திற்கு
நான்காண்டு நிறைவுதனில் அஞ்சலிகள் பல


குடும்பத்தினர்
021 221 6742

185/1, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

(cs:41082) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 11 . 1944



மறைவு
10 . 11 . 2021

### திருமதி ஜெயகுமாரி ஆலாலசுந்தரம்

பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயகுமாரி ஆலாலசுந்தரம் அவர்கள் கடந்த (10.11.2021) புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கமலாம்பிகை தம்பதிகளின் அருமை மகளும்,காலஞ்சென்ற ஆலாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலகுமார், பிரேம்குமார், உதயகுமார், பாலகுமார், விஜயகுமார், ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி (கனடா), நளினி (கனடா), லினோர் (கனடா) காலஞ்சென்றவர்களான ஜோசி, அற்புதரஞ்சிதம் மற்றும் சரஸ்வதி, சாந்தலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கரேந்திரன், தர்ஷினி, புரதாபன், ஜெனார்த்தனன், தாரிணி, ரஞ்சித்குமார், கிரிஷ், ராபி, பிரியதர்ஸினி, சுரேஷ் கௌரி, பாபு, நிரஞ்சன், சிவா, பிரியா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கெள்கிறோம் .

**பொன்னையா வீதி, (Post Office Lane), ஆனைக்கோட்டை.**

**தகவல்
குடும்பத்தினர்**

(CS 41079) (3/6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.